செந்தமிழ்ச் செல்வி

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக

மணிவிழா ஆண்டு

1920 – 1980



அரசு

சிலம்பு-௫௪] வள்ளுவர் ஆண்டு-௨௦௧௧ பங்குனி, Apr. 80 [பரல்-௮

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ௦கக, பங்குனி ஏப்ரல் 1980	பரல் அ

இந்தியாவில் நூல் வெளியீட்டுப் பணி

இந்தியாவில் வேறெக்காலத்திலும் கண்டிராத இக்கட்டான நிலையில் இன்றைய புத்தக வெளியீட்டுத் தொழில் சிக்கியுள்ளது. அறிவு வளர்ச்சிக்கு அடிகோலுவன புத்தகங்களே. அறிவு வளர்ச்சி தான் மற்றெல்லா வளர்ச்சிகட்கும் அடிப்படை. குறிப்பாக அறிவு வளர்ச்சியில்லையேல் அறிவியல், தொழில் துறை வளர்ச்சி கிடையாது. உண்மை இவ்வாறிருக்க இந்திய அரசும் மாநில அரசுகளும் இந்த அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையான புத்தக வெளியீட்டுத் தொழிலைப் புறக்கணித்தே வருகின்றன. ஒருநாடு அறிவு வளர்ச்சியில் முன்னேற அந் நாட்டின் புத்தக வெளியீட்டுத்துறை நல்ல நிலையில் இருக்க வேண்டும்.

புத்தகத் தொழில் வளர வேண்டுமானால் பொதுவாக மக்களிடையே படிக்கும் பழக்கமும் ஆர்வமும் இருக்க வேண்டும். படித்தவர்கள் குறைவாக உள்ள நாடு இந்தியா. எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்தான் இந் நாட்டில் பெரும்பான்மை. சிறுபான்மையினரான எழுதப் படிக்கத் தெரிந்தோருள்ளும் உயர் கல்வி பெற்றவர்கள் நூற்றுக்கு 2 அல்லது 3 விழுக்காடே ஆகும். இவர்களை நம்பியே புத்தகத் தொழிலை நடத்த வேண்டியுள்ளது என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். நாட்டு விடுதலைக்குப்பின் கல்லூரிகள் பெருகிய நிலையில் இந்த எண்ணிக்கை உயர்ந்து வருவது ஓரளவு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மக்களுக்கு இன்றியமையாத பொருள்களாகிய உடை, சவர்க்காரம் (சோப்பு) இரண்டை மட்டும் எடுத்துக் கொள்வோம். உடை மக்களில் நூற்றுக்கு நூறு விழுக்காடு பயன்படுத்தும் பொருள். சவர்க்காரம் 50 அல்லது 60 விழுக்காடு மக்களே பயன்படுத்துவது.

இவற்றை ஒப்பிடும்போது புத்தகத் தொழில் நூற்றுக்கு 2 அல்லது 3 விழுக்காட்டு மக்களுக்கே பயன்படுவதாகும். உடல் வெளுக்க சவர்க்காரத்தைப் பயன்படுத்தும் மக்கள் உளம் வெளுக்கப் புத்தகத்தைப் பயன்படுத்தாதது வருந்துதற்குரிய நிலையே.

படிக்கத் தெரிந்த மக்களிலும் பொது நூல்களைப் படிக்கும் எண்ணிக்கை மிகக் குறைவே. நூற்றுக்கு 10 விழுக்காட்டினரே பொது நூல்களைப் படிக்கின்றனர். அப்படிப் படிப்பவர்களும் பெரும்பாலும் பொழுதுபோக்கு நூல்களையே படிக்கின்றனர். அறிவை வளர்க்கும் நூல்களைப் படிப்பவர்கள் நூற்றுக்கு ஒன்றிரண்டு பேரே. அவர்களை நம்பியே இன்று நூலகங்கள் உள்ளன. பொழுதுபோக்கு நூல்களைப் படிப்பவர்கள் ஓரளவே நூலகங்களைப் பயன்படுத்துகின்றனர். பலவகையான நாள், கிழமை, திங்கள் இதழ்கள் அவர்களுக்கு வீட்டிலிருந்து படிப்பதற்குக் கிடைக்கின்றன.

இவ்வாறு ஒரு குறிப்பிட்ட அளவு மக்களுக்காக நூல்களை வெளியிட்டு வரும் பதிப்பாளர்கள் இன்று பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

ஆங்கிலப் புத்தகங்களைப் பொறுத்தவரை உலகிலேயே அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக நிறைய நூல்களை வெளியிடுவது இந்தியா. ஆனால் இந்த ஆண்டு அந்த நிலையை இழந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆண்டுக்கு 8,000 நூல்களை வெளியிட்ட இந்தியா இன்று அதில் பாதி அளவு கூட வெளியிடவில்லை.

இதற்கு முதல் காரணம் தாள் விலை ஏற்றமே. கடந்த சில ஆண்டுகளாகவே நிலையில்லாது இருந்துவரும் தாள் விலை சென்ற ஆண்டில் இரு மடங்குக்கும் மேல் ஏறிவிட்டது. கூடிய விலையிலும் தாள் வேண்டியபோது கிடைக்கவில்லை. அதற்கு மேலும் கருப்புப் பணம் கொடுத்தே வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தாள் விலை கூடிய அளவு புத்தக விலையை ஏற்றமுடியவில்லை. அதனால் புத்தகம் விற்றாலும் கிடைக்கும் ஆதாயம் போதிய அளவில் இல்லை. இக் காரணத்தால் சிறிய பதிப்பாளர்கள், குறிப்பாகப் பையடக்க நூல்கள் வெளியிடுவோரும் இந்திய மொழி நூல்களை வெளியிடுவோரும் பெரிதும் பாதிக்கப் பெற்றனர். தில்லியில் பெரிய வெளியீட்டு நிறுவனங்கள் பையடக்க வெளியீட்டுப் பகுதியை மூடிவிட்டன. இந்திய மொழி நூல்கள் வெளியிடும் சிறு நிறுவனங்கள் சிலவற்றின் நிலையும் இதுவே.

பெரிய நிறுவனங்களும் புத்தகங்களின் விலையை இரு மடங்கு கூட்ட முடியாத நிலையில் ஆதாயம் குறைந்து அதனால் புதுப்புது முயற்சியில் ஈடுபட முடியாது போயின.

தாள் விலை ஏறிய நிலையில் புத்தக விற்பனையும் குறைந்து விட்டது. அரசு நூலகங்களுக்குப் புத்தகங்களை வாங்க வழங்கும் மானியமும் இந்த ஆண்டு குறைந்துவிட்டது. ரூ 10 அல்லது 12 கோடி வழங்கிக்கொண்டிருந்த இந்திய அரசு, இவ்வாண்டு 2முதல் 3 கோடி வரை மட்டுமே ஒதுக்கியுள்ளது. எனவே, விற்பனையில் முக்கால் பகுதி நூலகங்களுக்குப் புத்தகத்தை வழங்குவதிலே நோக்கமாகக் கொண்ட புத்தகவெளியீட்டாளர்கள் இன்று அதுவும் இழந்து நிற்கின்றனர்.

இதனால் பதிப்பாளர்கள் மட்டுமே பாதிக்கப் படுவதாக எண்ணக்கூடாது. கல்லூரி மாணவர்களும் பேராசிரியர்களும் பொது மக்களுமே பெரிதும் பாதிக்கப்படுவர். அவர்களுக்குப் புதுப் புதுச் செய்திகளைத் தரும் புத்தகங்கள் உடனே கிடைப்பதற்கில்லை.

அடுத்து ஏப்பிரல் 1979க்குப்பிறகு கல்லூரிகளுக்குக் குறிப்பிடப் பெற்ற மானியங்களும் இன்னும் தொகையாக வழங்கப்பெறவில்லை. எனவே, கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் உடனடியாகப் புத்தகங்களை வாங்க முடியாது. புகழ்பெற்ற சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் கடந்த 10 மாதங்களில் ஒரு புத்தகம்கூட வாங்க வில்லை.

இத்தகைய சூழ்நிலைகளினால் இந்தியப் புத்தக வெளியீட்டுத் துறை நெருக்கடியான நிலையில் உள்ளது. இந்திய அரசு புத்தக வெளியீட்டுத்துறை நிலையாக ஊன்றவும் சீராக இயங்கவும் எத்தகைய உதவியும் செய்யவில்லை. குறிப்பாகச் சொன்னால் நாட்டு முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபடும் புத்தக வெளி யீட்டுத்துறை அரசால் ஒரு தொழில் துறையாகவே மதிக்கப் பெறவில்லை. வங்கிகள் இதையும் ஒரு வளர வேண்டிய துறையாக மதித்துக் குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து கொடுக்க வில்லை. மக்களிடையே படிக்கும் பழக்கம் பரவவில்லை. புத்தகங் களை வாங்கும் பழக்கம் அறவே இல்லை. நாள், கிழமை திங்கள் இதழ்களையும் தரக்குறைவான ஆங்கிலப் புதினங்களையும் வாங்கிப் படிக்கும் ஆர்வமே இன்று படித்த மக்களிடையே காணப் படுகின்றது. இந்த நிலை மாற வேண்டும். பயன்தரும் அறிவு நூல்களை மக்கள் வாங்கிப் படிக்க வேண்டும்.

இந்திய அரசும் புத்தக வெளியீட்டுத் துறைக்கு ஆக்கம் தரும் வகையில் தாள் விலை குறைத்தல், நூலக மானியங்களைக் கூடுதலாக வழங்குதல் போன்றவற்றைச் செய்ய வேண்டும். நாட்டின் பல்வகையான தொழில் துறைகள் முன்னேற வேண்டும்! ஆனால் அதே நேரத்தில் அம் முன்னேற்றத்துக்கு அடிகோலும் நூல்களை வெளியிடும் தொழிலும் முன்னேற வேண்டும். இதுவே ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சியாகும்.

“சொல்லியன் நெறிமுறை”—ஒரு முன்னோக்குத் திட்டம்

[புலவர் இரா. இளங்குமரன்]

“சொல்லியன் நெறிமுறை” என்னும் வரிசையில் மூன்று திங்களுக்கு ஒன்றாக மூன்றாண்டு அளவில் பன்னிருநூல்கள் வெளிவரும். அவையனைத்தும் முழுமையாகச் சொல்லாய்வு நூல்களே. சொல்மூலம், அதன் கிளைப்பு, தழைப்பு ஆகியனவும், அவற்றின் வளர்ச்சி நெறிமுறை அமைதியும் விளக்கப்பெறும்.

“எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே”

என்னும் தொல்லாசிரியர் ஆணையும்,

“மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்று”

என்னும் அவர்தம் நுணுக்கச் செவ்வியுரையும் இவ்வாய்வின் மூலக்கூறுகளாம்.

இவ் வாராய்ச்சி நூல்களால் அடையப்பெறும் பயன்கள் பலப் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை :

(க) தமிழின் தொன்மையும் முன்மையும் நன்கனம் வெளிப்படும்.

(உ) சொன்மூலக் கூறும் பொருள்வளர்ச்சிக்கு ஏற்பச் சொல்லமையும் நெறிமுறையும், சொற்பெருக்கமும் தெளிவாம்.

(ங) “எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே” என்னும் உண்மை இருவகை வழக்கானும் நிலைநாட்டப்பெறும்.

(ச) சொற்களுக்குக் காட்டிய - காட்டிவருகின்ற-பொருந்தா மூலங்களின் பொய்ம்மை தகரும்.

(ரு) நிகண்டு, அகரமுதலி, பிற்கால இலக்கியங்கள் முதலியவற்றில் ஏறியுள்ள கொச்சையும் வழுவும் அகலும்.

(சு) புதுக் கலைச்சொல்லாக்கம் பெருகுவதுடன் ஏட்டில் இதுகாறும் இடம்பெறாத விடுபாட்டுச் சொற்களும், விடுபாட்டுப் பொருள்களும் இடம்பெறும்.

'அறிதோறும் அறியாமை' காண்பதே ஆய்வின் இயற்கை ஆகலின், இவ்வாய்வு மேலும் மேலும் விரிவும் செப்பமும் அடைதற்கு உரியதே என்பது அனைவருக்கும் உடன்பட்ட கருத்தே.

புலமைநூல் கல்வியாளர்க்குப் புதியதொரு கடப்பாடு கட்டாயம் வேண்டும். அது, புனைகதை நூல்களைப் பற்றிப் பொதுமக்கள் கருத்துரைக்கும், ஒருவகைத் திறனாய்வு நெறியை மேற்கொள்வது போலப் புலமைநூல் கல்வியாளர்களும் கருத்துரைக்கும் திறனாய்வை மேற்கொள்ளுதல்வேண்டும் என்பது. அம் மேற்கோள், ஆய்வுநெறியைச் செப்பப்படுத்துவதுடன், செழிப்புறுத்தவும் தூண்டலும் துணையுமாய் அமையும். ஆகலின், இவ்வாய்வு நூல்களைக் கற்கும் புலமை ஆர்வலர்கள் நிறைகுறைகளை முறைபெற எடுத்துரைக்கும் முயற்சியில் ஊன்றுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

புதுநூற்படைப்பு, புத்துரையாக்கம், தொகுப்பித்தல், பதிப்பித்தல் ஆகிய பலதிறப்பணிகளில் என் தமிழ் வாழ்வைப் பயனுறுத்திவரும் பெருந்தகை தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் ஆவர். அவர்களுக்குப் பெருநன்றியுடையேன்; என்னெனின், அப்பணிப்பயனே, இப்பணிப் பெருக்கமாக அமைதலின் என்க.

இந்நெறிமுறை நூல்களை வரன்முறையாக வெளியிடுதற்கு வேண்டும் நல்ல பல கருத்துகளைத் தம் பட்டறிவால் எடுத்துரைத்ததுடன், பதிப்புப் பொறுப்பையும் உழுவலன்பாலும், உரிமைப்பெருக்காலும் ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் கழகப் பொது மேலாளர் திரு. இரா. கல்யாணசுந்தரர் ஆவர். அவர்களுக்கு அன்பார்ந்த நன்றியுடையேன்.

இவ் வரிசை நூல்களை அன்பர்களும், அறிஞர்களும், ஆர்வலர்களும் வாங்கித் தொகுக்கும் நற்றுணையும், தம் தொடர்புடைய பெருமக்களும் அவ்வாறே தொகுத்து வைக்கத்தக்க சொற்றுணையும் புரிதல் பெருநலமாம்.

இவ்வரிசையின் முதல்நூல் விரைவில் வெளிவரும். அது 'அகல்' என்னும் ஒரு சொல்லைப்பற்றிய நூலாகும். 'அகல்' என்னும் சொல்லின் வழியாகக் கிளைத்த—ஏறத்தாழ ஒருநூறு—சொற்களின் விளக்கம் இருவகை வழக்குகளாலும் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது. 'அகல்' ஆய்வு ஓர் 'அகன்ற' ஆய்வே!

''புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்''

என்னும் கம்பர் வாக்கு நூற்படைப்பாளிக்கும் நூற்படிப்பாளிக்கும் பொருந்துவதே!

சங்க நூல்களில் உகாய்

[பி. எல். சாமி, ஐ. ஏ. எசு.]

சங்க நூல்களில் அரிதாகக் கூறப்பட்ட மரங்களில் உகாயும் ஒன்றாகும். யகர வீறு உடையதென்று உகாய் என்ற சொல் நேமிநாத இலக்கண நூலில் 15ஆம் சூத்திர உரையில் காட்டப் பட்டுள்ளது.

"புறவுப் புறத்தன்ன புன்கா லுகாஅய்க்
காசினை யன்ன நளிகனி யுதிர" —குறுந்தொகை 274

"புல்லரை யுகாஅய் வரிநிழல் வதியும்
இன்னா வருஞ்சுர மிறத்தல்" —குறுந்தொகை 363

"வெயிலவிர்பு நுடங்கும் வெவ்வெங் களரிக்
குயிற்கண் ணன்ன குரூஉக்காய் முற்றி
....
உகாஅ மென்சினை யுதிர்வன கழியும்" —அகம் 293

"மிளகுபெய் தனைய சுவைய புன்காய்
உலறுதலை யுகாஅய்ச் சிதர்சிதர்த் துண்ட
புலம்புகொள் நெடுஞ்சினை யேறி நினைந்துதன்
....
புன்புறு உயவும் வெந்துகள் இயவின்" —நற்றிணை 66

"ஓமையு முழிஞ்சிலு முகாயும்"

உகாய் என்ற மரம் வறண்ட பகுதிகளிலும் உப்பங்கழிகளிலும் உப்புமிக்க நிலத்திலும் வளரும். இந்த மரம் வளரும் சூழ்நிலையை நன்கு உணர்ந்தே நுடங்கும் வெவ்வெங் களரியிலும் வெந்துகள் இயவிலும், உகாய் மரத்தை அகநானூறும் நற்றிணையும் கூறி யுள்ளன. "புறவுப் புறத்தன்ன புன்கால் உகாய்" என்று அழைத் ததும் செடி நூலார் கண்டதுடன் ஒத்துள்ளது. சாம்பல் நிறப் புறத்துடன் புல்லிய காலையுடைய சிறிய மரம் என்பதில் ஐயமில்லை. இம் மரம் பல கிளைகளை விடும். (much branched) என்று செடி நூலார் கூறுவர்.

இச் செய்தியை 'உலறுதலை உகாய்' என்று நற்றிணைப் பாடல் கூறியுள்ளது. இந்த மரத்தின் பூ மிகவும் சிறியதும், சிறப்

பற்றதுமாகையால் இதன் பூவைச் சங்கப் புலவர்கள் விளக்க வில்லை. ஆனால், உகாயின் கனி தனித்தன்மையுடையதால் கனியைப் பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன. 'காசினை யன்ன நளிகனி' என்று குறுந்தொகை கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். சங்க காலத்தில் வழங்கிய காசு உருண்டையாக இருந்தது. இப்போதைய காசுபோல் தட்டையாக இருந்ததில்லை. வேப்பம் பழம்போலக் காசிருந்ததாகவும் குறுந்தொகை (67) கூறி யுள்ளது. குமிழம்பழம் பொன்செய் காசுபோல இருந்ததாக நற்றிணை (274) கூறியுள்ளது. வரலாற்றுக் கண்ணோடு பார்க்குங் கால் யவனர்களின் பொன் நாணயங்களும் 'அன்ருடும்' காசுகளாக சங்க காலத்தில் புழங்கியிருக்கவேண்டும். காசு என்ற பெயர் சங்க காலத்திலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளாக வழங்கி ஆங்கிலத் தில் Cash என்ற சொல்லாகப் புகுந்து Cashier போன்ற சொல் விலும் உள்ளது. மணிக்காசு போன்று உகாய்க்கனி இருந்த தாகக் கூறுவதையும் கவனிக்கலாம். விலையுயர்ந்த மணிகளும் உயர்ந்த மதிப்புடைய காசுகளாகச் சங்க காலத்தில் வழங்கி யிருக்கலாம்.

மாணிக்கம், நீலம் போன்ற மணிகள் உயர் மதிப்புடைய (Higher denomination) காசுகளாக வழங்கியிருக்கலாம். உகா யின் பழத்தின் நிறம் நல்ல சிவப்பாக இருக்கும். உருண்டு திரண்டு இருக்கும். 'குயில் கண்ணன்ன குரூஉக்காய் முற்றி' என்று அகநானூறு கூறுவதிலிருந்து குயிலின் சிவந்த கண்ணோடு ஒப்பிட்டிருப்பதைக் காணலாம். மாணிக்கத்தின் நிறத் திற்குக் குயிலின் சிவந்த கண் நிறத்தை ஒப்பிட்டுச் சிலப்பதிகாரத் திலும் திருவிளையாடற் புராணத்திலும் வருவதைக் காணலாம். சங்க நூல்களில் இதன் கனியின் உருவத்தை மட்டும் சொல்ல வில்லை. கனியின் சுவையையும் அழகிய உவமையால் விளக்கி யிருப்பது வியப்புக்குரியது. இதன் பழம் சிறிது காரமானது (Pungent). ஆதலின் மிளகு பெய்ததுபோலச் சுவையுடைய புன் காய் என்று நற்றிணைப்பாடல் கூறியுள்ளது. இதன் காயும் கனியும் காரம் உடையவை. நான் இதன் காயையும் கனியையும் தின்றிருக்கிறேன். சங்க இலக்கியத்தில் கூறிய செய்தி உண்மை யானதேயாகும். இதன் காயைப் புல்லிய புரு உண்டு உயவும் என்று கூறியுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

இதன் காயையும் கனியையும் புருவும் கிளியும் உண்ணும். ஆனால், ''உகாய் சிதர் சிதர்த்துண்ட புலம்புகொள் நெடுஞ்சினை யேறி நினைந்து தன்பொறிகிளர் எருத்தம் வெறிபட மறுகிப் புன்புரு உயவும்'' என்ற நற்றிணை வரிகளுக்கு உரையாசிரியர் பின்னத்

தூர் நாராயணசாமி ஐயர் கூறிய உரை பொருத்தமாக இல்லை. "வண்டுகள் நெருங்காதபடி போக்கியுண்டதனாலாகிய வருத்தமிக்க புல்லிய புரு, நெடிய சினைமேலேறித் தான் தின்றவற்றைக் கருதி வரைகள் விளங்கிய தன் பிடரி சிலிர்த்துத் தின்ற வெறிப்பினால் மறுக்கமுற்று வருந்தி நிற்கும்" என்று உரை கூறியுள்ளார். வண்டுகள் உகாயின் காயை மொய்ப்பதில்லை. வண்டுகள் பூவையே நாடும். சிதர் சிதர்த்துண்ட என்பதற்குச் சிதர்த்து சிதர்த்து உண்ட என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். கொத்தி உண்டதையே சங்கப் புலவர் கூறியுள்ளார். உகாயின் கனியைக் கொண்டலாத்தி முதலிய பறவைகள் தின்று அதன் சிறிய விதைகளைப் பரப்பும் என்று பறவை நூலார் கூறியுள் ளனர். சங்கப் புலவர் இனிசந்தநாகனார் இயற்கையில் உகாயின் காயைப் புரு தின்றதை நுட்பமாகப் பார்த்துக்கூறிய செய்தி போற்று தற்குரியதாகும். தவிட்டுப்புரு இணைசேர விழையுங் காலத்துப் பேடையை நோக்கிச் சென்று கழுத்துத் தூவிகளைச் சிலிர்த்துத் தலையைத் தாழ்த்தியும் தூக்கியும் சுற்றிவருமென்று பறவை நூலார் கூறுவர். (Male has the characteristic bowing courtship-head lowered, throat inflated, rump arched and tail d pressed bobbing and cooing) 'எருத்தம் வெறிபட' (Throat inflation) என்பதற்குப் பொருத்தமான உரை பறவை நூலார் கூறியதோடு ஒத்துள்ளது.

பின்னத்தூரார் 'வெறிபட' என்பதற்கு உகாய்க்காயின் மணம் வெளிப்பட என்று பொருத்தமின்றிக் கூறினர். மற்றும் உகாய்க் காயைத் தின்றதால் எருத்தம் வெறிபட மறுகி உயவுவதாகக் கூறியதும் தவறு. நற்றிணையில் பேடையை நினைந்து இச் செயல் புரிந்ததாகக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண் டும். ஆதலின் புருச்சேவலின் இச்செயல் இணைசேர அழைக் கும் விளையாட்டே என்பதை உணரவேண்டும். உகாய்ப் பழம் என்ற பெயர் மயிலைநாதர் எழுதிய நன்னூல் உரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. உகாய் என்ற பெயர் உகு+காய் என்ற இரு சொற்கள் இணைந்து வந்ததாகும். இதன் கனி காற்றில் உகுந்து விழுந்து விடும் தன்மையுடையதால் உகாய் எனப்பட்டது. இந்த மரத்தை ஆங்கிலத்தில் 'The Mustard tree' என்றும் அறிவியலில் 'Salvadora Persica' என்றும் அழைப்பர். கடுகு போன்ற சிறிய விதைகள் இருப்பதால் ஆங்கிலத்தில் கடுகு மரம் என்ற பொருளில் வழங்கினர்.

———

தெ. பொ. மீ.யின் திரிபாராய்ச்சி

[ஞா. தேவநேயன்]

(முன் இதழ் உஅகூஆம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழிலக்கணத்தில் அயன்மொழியமைப்புகள்"
(Foreign Models in Tamil Grammar)

2- ஆம் அதிகாரம்

கூற்று: 'தோல்காப்பியக் காலம்' (Age of Tolkappiyam)

'தொல்காப்பியமும் சமற்கிருதமும்'

"தொல்காப்பியம், சமற்கிருதச் சொற்கள் திரிக்கப்பட்டுத் தமிழிலக்கியத்தில் வழங்கி வந்ததை நோக்குகின்றது. (தொல். 880, 884, 885. கழகப் பதிப்பு, 1954). தொல்காப்பியரே சமற்கிருதச் சொற்களை ஆண்டிருப்பதைப் பிரயோகவிவேகம் குறிப்பிடுகின்றது. ஏற்கெனவே வேறோரிடத்திற் குறிப்பிட்டுள்ளவாறு கருத்து வேறுபாடுகளிருந்தனவேனும், ஒலியியலும் இலக்கணமும் பற்றி ஓர் அனைத்திந்தியக் கொள்கை யிருந்தது. தொல்காப்பியர் மேலையர் கொள்கையையும் சீனர் கொள்கையையும் பின்பற்றாது அவ்வனைத்திந்தியக் கொள்கையையே பின்பற்றினர் என்பது பற்றிக் கருத்து வேறுபாடிருக்கமுடியாது. சமற்கிருத நெடுங்கணக்கின் அமைப்புமுறை ஏற்கெனவே வேறொரு கட்டுரையில் ஆயப்பட்டுள்ளது. அவ் வெழுத்துக்களின் தெள்ளிய ஒலிப்புமுறை இக்கால ஒலிநூலை நினைவுறுத்தினும், இந்தியாவிற்கே சிறப்பாகவுரியதாகும். அவை யாவும் மொழிகளின் உலகப் பொதுவியல்புகள் தொல்காப்பியர் அவற்றை உணர்ந்துகொண்டார். அதனால், அவர் அனைத்திந்தியக் கொள்கையைப் பின்பற்றுவதில், தமிழின் சிறப்பியல்பைக் கெடுக்கவில்லை.

'வடக்கோடு நெருங்கிய தொடர்பு கொண்டபின்'

"இவை யாவும், சமற்கிருத இலக்கண முறைமையொடு நெருங்கிய தொடர்புகொண்ட பின்னரே தொல்காப்பியம் தோன்றிற்றென்பதை மெய்ப்பிக்குஞ்சான்றுகளாகின்றன. மேலையர் 19ஆம் நூற்றாண்டிற் சமற்கிருத இலக்கணத்தைக் கண்டுபிடித்ததே மேற்கில் மொழிநூல் வளர்ச்சிக்கு வழிகாட்டியது போன்று, கிழக்கில் சமற்கிருதத்தோடும் திரவிடமல்லாத மொழிகளோடும்

தொடர்புகொண்டதே, தமிழின் ஒலியியலையும் இலக்கண அமைப்பையும் வண்ணிக்கும் முயற்சியை மேற்கொள்ள நேரடியான தூண்டுகோலாயிருந்திருத்தல் வேண்டும். இது இயற்கைதானே கையாளும் இனக்கலப்புப் போன்றது. இங்ஙனமே உலகமெங்கும் நாகரிகங்களும் கலைப்பண்பாடுகளும் தோன்றியுள்ளன. இம் முயற்சியும் முதலியன்மையுள்ளதே.

'கி. மு. 4-ஆம் நூற்றாண்டுக் காத்தியாயனர்'

"திரவிடர் இருக்கு வேதக்காலத்தில் ஆரியரொடு தொடர்பு கொண்டிருக்கலாம். ஆனால், சமற்கிருதத்திற்குத் தமிழ்நாகரிகக் கலைப்பண்பாட்டோடு ஏற்பட்ட தொடர்பு திட்டவட்டமான தொன்றாகையால், பிந்தியே நேர்ந்திருத்தல்வேண்டும். சடங்கு முறைமைக்கும் பிற பயன்பாட்டிற்கும் வேதங்கள் தோரா. கி. மு. 1000 போல் தொகுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. வேதமந்திரங்களின் ஒலியியல் இலக்கணக்கூறுகளைப் போற்றிக்காத்தற்குத் தோதாக, பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் விளைவாக, இலக்கணமும் ஒலியியலும் சொல்லியலும் சொற்றொடரியலும் வளர்ச்சியுற்றன. பாணினியின் இலக்கணமுறை நிறைவு பெறப் பல தலைமுறைக் காலஞ் சென்றிருத்தல்வேண்டும். பாணினி காலம் கி. மு. 6ஆம் நூற்றாண்டு அல்லது சற்று முன்பு என்று குறிக்கப்பட்டுள்ளது. பாணினிக்குத் தமிழரொடு அல்லது அவர் கலைப்பண்பாட்டொடு ஏதேனும் தொடர்பிருந்ததாகப் பாணினி மொழியில் யாதொரு குறிப்புமில்லை. கி. மு. 4ஆம் நூற்றாண்டினரான வரருசி என்னும் காத்தியாயனர், பாணினி நூற்பாக்களின் குறைநிரப்பலாகிய வார்த்திகங்கள் என்னும் திருத்தவுரையை இயற்றினர். அவர் தமிழரையும் அவர் கலைப் பண்பாட்டையும் நன்றாய் அறிந்திருந்தார். அவர் வார்த்திகங்களுள் ஒன்று சோழ பாண்டியங்களைக் குறிப்பிடுகின்றது. சோழபாண்டியம் என்பது, குருபாஞ்சாலம் என்பது போன்றே அரசரையும் அவர் நாட்டையுங் குறிக்கும். ஆதலால், கி. மு. 4ஆம் நூற்றாண்டில் அல்லது ஒருகால் 5ஆம் நூற்றாண்டில், தொலைவிலுள்ள வடவர்க்கும் தென்றிசைத் தமிழர்க்கும் இடையே கலைப்பண்பாட்டுத் தொடர்புகள் வளர்ச்சியடைந்திருக்கலாம். ஆனால், தொல்காப்பியம் நெருங்கிய தொடர்பை அதினும் பேரளவிற் காட்டுகின்றது. எங்ஙனமிருப்பினும், ஒருவர் தொல்காப்பியத்தைக் கி. மு. 4ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாகக் கூறமுடியாது." (பக். 17-18)

மறுப்பு

"*இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்*
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே." (தொல். எச். 1).

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே." (ஷை ஷை 5)

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்." (ஷை ஷை 6)

என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள், பாண்டியரின் இரண்டாம் தலைநகர் முழுகி இரண்டாம் தமிழ்க்கழகமுங் குலைந்து, தூய தமிழ்க் காவலரின்றித் தமிழ் ஆரியர் வயப்பட்டுப்போன காலத்தில், ஆரியம் வேரூன்றிய சேர நாட்டில் வாழ்ந்த தொல்காப்பியர், செந்தமிழ் மரபையும் சொல்வளத்தையும் ஒருங்கே சிதைத்து நாளடைவில் தமிழை ஆரிய வண்ணமாக்கும் பொருட்டு ஆரியத் தமிழ்ப் பகைவர் தமிழில் வேண்டாது புகுத்திய ஒரு சில தொடக்க வடசொற்களை அயற்சொற்களென்ற வகையில் குறித்ததைக் காட்டுமேயன்றி, அச் சொற்கள் தமிழுக்கு இன்றிமையாதன வென்றும், அவற்றால் தமிழ் வளம்பெற்றதென்றும், உணர்த்தா.

பிராமணியம் தமிழரின் தாய்மொழிப் பற்றையும் உணர்ச்சியையும் பெரும்பாலுங் கொன்றுவிட்டதனால், அயன்மொழியாரின் தொடர்பு கொள்ளும்போதெல்லாம் ஒரு சில அயற்சொற்களையும் வழக்கிற் புகுத்திக்கொண்டனர். சன்னல் (ஜன்னல்) சாவி என்பன போர்த்துக்கீசியச்சொற்கள். ஆயின், அவை தமிழ்ச் சொற்களை வழக்கு வீழ்த்தித் தூய தமிழ்ச்சொற்கள் போன்றே வழங்கிவருகின்றன. அவற்றுள், முன்னது பலகணி, சாளரம், காலதர் என்னும் மூன்று அழகிய தமிழ்ச்சொற்களையும், பின்னது திறவுகோல், துறப்புக்குச்சு, தாழ்க்கோல் என்னும் மூன்று தெளி பொருட் சொற்களையும், இலக்கியச்சொல்லும் அருஞ்சொல்லும் ஆக்கியுள்ளன. இதனால், போர்த்துக்கீசியச் சொற்கள் தமிழுக்கு இன்றியமையாதன வென்றும், போர்த்துக்கீசியமே தமிழுக்கு மூலமென்றும், ஒருவரும் சொல்லத்துணியார். இங்ஙனமே வடசொல் நோக்கியும் உணர்க.

போர்த்துக்கீசியச் சொல்லிற்கும் வடசொல்லிற்கும் வேறுபாடென்னையெனின், முன்னது தன்னவரே புகுத்திக்கொண்டதென்றும், பின்னது வேற்றாரும் மாற்றாருமான ஆரியர் புகுத்தியதென்றும், அறிந்துகொள்க.

தொல்காப்பியர் தாமே ஆண்டனவாகப் பிரயோக விவேகம் குறிக்கும் வடசொற்கள் அடுத்த கட்டுரையில் விளக்கப்படும்.

தமிழ் வேர்ச்சொல்லாராய்ச்சியும் தமிழன் பிறந்தகமும் ஆரியன் தோன்றியகமும் பற்றிய ஆராய்ச்சியும் தமக்கின்மையால், பர். தெ. பொ. மீ, தமிழரும் ஆரியரும் தொடர்பற்ற வெவ்வேறினத்

தாரென்றும், ஒரே காலத்தில் தோன்றியவரென்றும், இன்று போன்றே முன்பும் இருந்தனரென்றும், ஆரியராலேயே தமிழர் நாகரிகப்படுத்தப்பட்டனரென்றும், எண்ணிக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. தமிழர் என்றது திரவிடரையும் தழுவும்.

அவர் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த காலத்தில், குமரிமுனைக்குத் தெற்கே ஒருகாலத்தில் நிலமட்டும் இருந்ததென்றும், அதில் மக்கள் குடியிருக்கவில்லையென்றும், ஒரு முறை சொன்னதாகப் பர். மெ. சுந்தரனார் சொன்னார். தமிழரின் முன்னோர் குமரிநாட்டுப் பழங்குடிமக்கள் என்பது, தமிழ் அல்லது தமிழர் வரலாற்றிற்கு அடிப்படையான உயிர்நாடிச் செய்தியாகும். இதையுணராதார் எத்துணை கற்பினும் தமிழறிந்தவராகார்.

> "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"

என்னும் சிலப்பதிகாரப் பகுதியும் (11 : 19-22) அதற்கு அடியார்க்கு நல்லார் வரைந்த உரையுமே, தமிழன் குமரி நாட்டுத் தோற்றத்திற்குப் போதிய சான்றாம். இஃதல்லாது இருபதிற்கு மேற்பட்ட ஏனைச் சான்றுகளுமுள.

குமரி நாட்டுத் தமிழரே, தமிழின் பல்வேறு நிலையில் பல்வேறு திசை சென்று உலக முழுதும் பரவினர். (V. R.) இராமச்சந்திர தீட்சிதரின் 'தமிழரின் தோற்றமும் பரவலும்' (Origin and Spread of the Tamils) என்னும் ஆங்கில நூலைப் பார்க்க. வடபாற் சென்ற தமிழர் திரவிடராயினர். வடதிரவிடர் பிராகிருதராயினர். பிராகிருதர் ஐரோப்பாவும் மேல் ஆசியாவும் சென்று ஆரியராயினர்.

"First as to the Aryan family, called also Indo-European, which takes in the languages of part of South and West Asia, and almost the whole of Europe. The original tongue whence these are all descended may be called the Primitive Aryan. What the roots of this ancient language were like, and how they were put together into words, the student may gain an idea from Greek and Latin, but a still better from Sanskrit, where both roots and inflexions have been kept up in a more perfect and regular state......

"......The early home of the Aryans is supposed to have been in Inner Asia, perhaps in the present Turkestan,

in the region of the Oxus and Yaxartes, for here the practicable way of migration for nomads with flocks and herds lies open down into Persia on the one side, and India on the other, As India and Persia have preserved in their sacred languages the Aryan tongue less changed than else where, it may be judged that the land whence the invading Aryans came was not far off." (Anthropology by Edward B. Tylor, pp. 156 - 7)

'The Cradle of the Aryas'

"The fact......is in perfect harmony with the theory that the original home of the Aryas was on the slopes of the mountains which form the junction between the Hindukush and the karakorum chains, what may be called the Northern Kohistan.

"......the region drained by the feeders of the Indus, the Oxus, and Yaxtartes." (Three Lectures on the Science of Language by F. Max Muller, pp. 64-5)

இந் நடுமேலை ஆசியாவினின்றே, வேத ஆரியரின் முன்னோர், கிரேக்கத்திற்கு நெருங்கிய ஒரு மொழியைப் பேசிக்கொண்டும், ஆடுமாடு மேய்த்துக்கொண்டும், மாட்டிறைச்சி யுண்டுகொண்டும், இயற்கையையும் ஐம்பூதங்களையும் இரு சுடரையும் வணங்கிக் கொண்டும், எழுத்தும் இலக்கியமுமின்றி முல்லை நாகரிக நிலையிற் சிறுசிறு கூட்டமாகக் கி. மு. 2000—1500 போல் இந்தியாவிற்குட் புகுந்தனர்.

அவர் மொழி கிரேக்கத்திற்கு நெருங்கிய தென்பது, கீழ்வரும் தா என்னும் வினை முற்றின் நிகழ்கால வடிவொப்புமையால் அறியப் படும்.

	தமிழ்	கிரேக்கம்	வழக்கொழிந்த ஆரியம்
ஒருமை	தருகின்றேன்	திதோமி	ததாமி—dadhāmi
	தருகின்றாய்	திதோஸ்	ததாஸி—dadhāsi
	தருகின்றான்	திதோஸி(ன்)	ததாத்தி—dadhāti
இருமை	———	———	தத்வஸ்—dadhvas
	———	திதொத்தொன்	தத்தஸ்—dhatthas
	———	திதொத்தொன்	தத்தஸ்—dhattas

பன்மை	தருகின்றேம்	[திதொமென்	தத்மஸ்—dadhmas
	தருகின்றீர்	திதொத்தெ	தத்த—dhattha
	தருகின்றனர்	திதொ ஆஸி(ன்)	ததத்தி—dadhati

தா என்னும் ஓர் அடிப்படைத் தமிழ் வினைச்சொல், இலத்தீனிலும் கிரேக்கத்திலும் வேதமொழியிலும் பல்வேறு வடிவில் திரிந்து வழங்குகின்றது. தமிழின் முதன்மையையும் மூலத் தன்மையையும் காட்ட இஃதொன்றே போதும். அதனால், இதை மறுக்குமாறு, ஈராண்டிற்கு முன்பே பர். தெ. பொ. மீ. அவர்கட்கு ஓர் அறைகூவல் விடுத்தேன். அதற்கு இதுவரை மறுமொழியில்லை.

கீழையாரியர் கால்நடை மேய்த்தலைச் சிறப்புத்தொழிலாகக் கொண்டிருந்தனரென்பது, கோத்திரம் என்னும் குடும்பப் பெயராலும் துஹித்ரு என்னும் மகட்பெயராலும், உழவுத்தொழிலை மேற்கொள்ளவில்லையென்பது, அவர் நாடோடித்தன்மையாலும், மேலையாரிய மொழிகளிலுள்ள ஏர் என்னுந் தென்சொல் அவர் மொழியிலின்மையாலும், உழவுத்தொழிலைக் கொலைத்தொழிலென்று அவர் தருமசாத்திரம் பழிப்பதாலும்; அறியப்படும். (கோ = ஆன் (பசு) துஹ் = கற) அவர் மொழிக்கு மேனாட்டில் வழங்கிய பெயர் மறைந்தொழிந்தது. ஆரியம், சமற்கிருதம் என்னும் இரண்டும் அவர் இந்தியாவிற்கு வந்து தமிழரொடு தொடர்புகொண்டபின்னரே தோன்றியவை. ஆரியம் என்னும் சொல் இந்தியாவினின்றே மேலை நாடுகட்குப் பரவிற்று.

ஆரியம் என்பது தமிழ்ச்சொல்லே. அரு—ஆரி = அருமை, அழகு, மேன்மை. "ஆரியாகவஞ் சாந்தந் தனித்தபின்" (சீவக. 129) ஆரி—ஆரியன் = மேலோன். இது ஆரியரே தமிழரை ஏமாற்றித் தமக்கு இட்டுக்கொண்டது. 'aristos' (best) என்னும் கிரேக்கச் சொல்லிற்கும் 'அரு' என்பதே மூலமாயிருத்தல் வேண்டும். ஏர்—Ar—Arya என்பது தவறு.

கும்—சும்—சம் (ஸம்). கும்முதல் = குவிதல், கூடுதல், கலத்தல், கருமை = மிகுதி, பெருமை. கள்ளுதல் = கலத்தல், கூடுதல். கள்—களம் = கூட்டம், அவை. கள்—கர்—கரு. கருத்தல் = மிகுதல், மிகுத்தல், செய்தல். கரு—கருமம் கரு—கருவி. கரு—கரணம். கரு—(வ.) க்ரு-க்ருத. ஸம்க்ருத—ஸம்ஸ்க்ருத = பிராகிருதமும் தமிழும், அல்லது வேதமொழியும் தமிழும் கலந்து செய்யப்பட்டமொழி. ப்ராக்ருத = சமற்கிருதத்திற்கு முந்து செய்யப்பட்ட மொழி. புதிதாகச் செய்யப்பட்ட பொருளால் அப்பொருளினம் மிகுதல் காண்க. இனி, கருத்தல் = கை கருத்துக் காழ்ப்பேறுமளவு உழைத்துச் செய்தல் என்றுமாம். "கருங்கைக் கொல்லர்"

(சிலப். 5 : 29) என்னும் வழக்கை நோக்குக. கருத்தல் என்னும் வினை தமிழில் முன்பே வழக்கற்றது. பிரா = முன். கருத = செய்யப் பட்டது.

தமிழர் கி. மு. 100,000 ஆண்டுகட்கு முன்பே குமரிநாட்டில் தோன்றிய மூலமக்களினத்தாரின் வழிவந்தவர். இற்றை இலக் கியத்தினும் விரிவான, எழுநிலச் செய்யுளாலியன்ற பல்துறை முழுத்தூய இலக்கியத்தையும் முத்தமிழிலக்கணத்தையுங் கொண்டி ருந்தவர்.

தொல்காப்பியம் நூலினியல்பை,

"ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப." (செய். 168)

"நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்" (ஷை 170)

"ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்." (ஷை 171)

"மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்
றோன்றுமொழிப் புலவர் பிண்ட மென்ப." (ஷை 172)

என விளக்கி, ஈருறுப்படக்கிய நூல் என்றும், மூவுறுப்படக்கிய பிண்டம் என்றும், நூலை இருவகையாக வகுத்துக்கூறிற்று.
மேற்கூறிய பிண்ட நூற்பாவிற்கு,

"அம் மூன்று உறுப்பினையும் அடக்கிவருவது பிண்டம் என்ற வாறு.

"அம் மூன்றனையும் உறுப்பெனவே, பிண்டமென்பனதாம் உறுப்பினவென்பது பெற்றும். தொல்காப்பியம் என்பது பிண்டம்; அதனுள் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரமென்பன படலமெனப்படும்; அவற்றுள் ஓத்துஞ் சூத்திரமும் ஒழிந்த இரு கூறுமெனப்படும்.

'தோன்றுமொழிப் புலவர் பிண்ட மென்ப' என்றதனுல், பிண்டத்தினையும் அடக்கிநிற்பது வேறுபிண்டமுளதென்பது. அது முதனூலாகிய அகத்தியமே போலும்; என்னை ? அஃது இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்னும் மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின்" என்று உரைத்தார் பேராசிரியர்.

ஒத்து எனினும் இயல் எனினும் ஒக்கும். அதிகாரம் எனினும் படலம் எனினும் பால் எனினும் ஒக்கும்.

பாணினீயம், சூத்திரம் பாதம் அத்தியாயம் என்னும் மூன்று றுப்படக்கியதேனும் அதைப் பிண்டமென்னும் வழக்கு வடமொழியி வில்லை. மேலும், அது எழுத்தும் சொல்லும் ஆகிய இரண்டே கூறுவதால், ஈருறுப்படக்கியதாகவே கொள்ளப்படும். ஆதலால், அது நூலன்றிப் பிண்டமாகாது.

தொல்காப்பியத்திலுள்ள பொருளதிகாரம் என்னும் மூன்று முறுப்பு, யாப்பு அணியென்னும் பொதுவகைக் கூறுகளொடு வேறெம்மொழியிலுமில்லாத பொருளிலக்கணமென்னும் தனிச் சிறப்புக்கூற்றைக் கொண்டிருத்தலால், தொல்காப்பியத்திற்கிணை யான இலக்கணநூல் இவ்வுலகில் ஒன்றுமே யில்லையென்பது தெள்ளத் தெளிவாம். பொருளிலக்கணத்தைப் பாட்டியலென்று கூறி அதன் பெருமையைக் குறைக்கவும் மறைக்கவும் முயல்பவர், தம் அழுக்காற்றின் அளவின்மையைக் காட்டுவதோடு, நேர்நின்று கருங்காக்கையை வெண்புருவென்னும் கடுந்துணிச்சற் பொய்யரே யாவர்.

இறையனாரகப் பொருளுரை கூறும் தொன்னூல்களை நம்பாதும், தொல்காப்பியர் ஆங்காங்குக் குறிப்பிடும் முன்னூல் களைக் கருதாதும், வடநூல்களிலில்லாத தொல்காப்பியப் பொருளி லக்கணத்தைக் கண்டுங் காணாததுபோற் கண்மூடியும், நன்னூலும் சின்னூலும்போல் எழுத்துஞ் சொல்லுமே கூறும் பாணினீயத்தினின்று மூன்றுறுப்படக்கிய பிண்டமான தொல் காப்பியந் தோன்றிற்றென்பது, பூனை வயிற்றினின்று புலிக்குட்டி வந்ததென்றும், நரிமா அரிமாவை ஈன்றதென்றும், கூறுவது போன்றதே.

உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூவகையெழுத்துக் கொண்ட நெடுங்கணக்கு, இந்தியாவில் மட்டுமன்றி உலகிலேயே முதன்முதல் தமிழில்தான் தோன்றிற்று. அதைப் பின்பற்றியே பிராமியும் கிரந்தமும் தேவநாகரியும் தோன்றின. இது பின்னொரு கட்டுரையில் விரிவாக விளக்கப்படும்.

வேதமந்திரங்கட்குச் சிட்சை என்னும் ஒலியியலும், பிராதி சாக்கியம் என்னும் தனிமறை அல்லது மந்திரத்தொகுதிக்குரிய இலக்கணமுறையும், தமிழிலக்கணத்தைப் பின்பற்றியே எழுந்தன.

இந்திய ஆரியரின் வழக்கிறந்த தாய்மொழியும் பிராகிருதமுங் கலந்ததே வேதமொழி. வேதமொழியும் தமிழும் கலந்ததே சமற்கிருதம் என்னும் பல்துறை உலகியல் இலக்கியமொழி. வேத

மொழியைச் சமற்கிருதம் என்பது முற்காலப்படுத்தம் (Prochronism) என்னும் வழுவாகும்.

சமற்கிருதத்திற்கு எழுதப்பட்ட இலக்கணமே வியாகரணம். முதன்முதல் தோன்றிய ஐந்திரம் என்னும் சமற்கிருத இலக்கணம், தமிழகத்திலேயே தோன்றித் தமிழகத்திலேயே அழிக்கப்பட்டது. ஐந்திரத்திற்குப் பிற்பட்டதே அஷ்டாத்யாயீ என்னும் **பாணினீயம்.** தொல்காப்பியர் பாணினிக்கு முற்பட்டவராதலின் ஐந்திரம் மட்டும் கற்றிருந்தார். அதனுலேயே, "ஐந்திரம் நிறைந்த தொல்காப் பியன் எனத் தன்பெயர் தோற்றி" என்று **பனம்பாரனுர்** பாயிரத்திற் பாடினுர்.

தொல்காப்பியர் காலம் கி. மு. 6ஆம் நூற்ருண்டு; **பாணினி** காலம் கி. மு. 5ஆம் நூற்ருண்டு. வடமொழியிலக்கணம் தமிழிலக்கணத்தினின்று தோன்றிற்றேயன்றி, தமிழிலக்கணம் வடமொழியிலக்கணத்தினின்று தோன்றவில்லை.

எழுத்துமுறை, எழுத்துச்சாரியை, எழுத்துப்பிறப்பியல், உயிர் மெய்த் தனிவடிவம், புணரியல்விரிவு, சொல்லமைப்பு, சொல்வகை, தொகைதொடர் வகை, எண்வேற்றுமை, முதலியவற்றில், வடமொழியிலக்கணம் தமிழிலக்கணத்தைத் தழுவியிருப்பது, தெற்றெனத் தோன்றும். தொல்காப்பியர் மூவதிகாரத்தையும் ஒவ்வொன்பது இயல்களாக வகுத்திருப்பதுபோன்று, பாணினியார் எண்ணத்தியாயத்தையும் நந்நான்கு பாதமாக அமைத்திருப்பது, கவனிக்கத்தக்கது. பாணினீயம் படிப்படியாகத் திருந்திவந்த பல இலக்கண நூல்கட்குப் பிற்பட்டதாகும். அதன் முன்னுூல்கள் 60 என்பர் கா. சு. பிள்ளையார்.

பதினெட்டாம் நூற்ருண்டிறுதியில், **சார்ல்ஸ் வில்கின்சு** (charles wilkins) **உவில்லியம் சோன்சு** (William Jones) முதலிய மேலையறிஞராற் சமற்கிருதம் வெளிப் படுத்தப்பட்டபின், மேனுட் டார் ஆரிய ஒப்பியன் மொழிநூலை வளர்த்தனர். ஆயின், ஆரியத்தின் மூலமொழியை அறியாமையால், அம்மட்டில் நிறுத்திக் கொண்டு அதற்கு **வண்ணனை மொழிநூல்** (Descriptive Linguistics) என்று பெயரிட்டனர். ஆரியம் திரிமொழியாதலால், அதன் வாயிலாக வேர்ச்சொற்களையும் அவற்றின் பொருளையும் மூலமொழி தோன்றிய வகையையும் அறிய முடியாது. அவற்றை அறிவிக்கக் கூடிய இயன்மொழி தமிழ்ஒன்றே. உண்மையான மொழிநூல், ஒப்பியலும் வண்ணனையியலும் வரலாற்றியலும் ஒருங்கே கொண்டு கொடிவழியியல் (Geneological) முறைப்பட்டதாகவேயிருத்தல் வேண்டும். ஆதலால், வண்ணனைமொழிநூல் என்பது ஓர் அறிவிய யலாகாது. இது பின்னரும் விளக்கப்படும். (தொடரும்)

மூன்றும் வேற்றுமை யுருபு

[மயிலம், ஆ. சிவலிங்கனுர்,

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20.]

நன்னூலர்

மூன்றும் வேற்றுமை யுருபுகளாக ஆல், ஆன், ஓடு, ஒடு என நான்கு கூறியுள்ளார் நன்னூலார்.

''மூன்று வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்'' (நன்.)

என்பது அவர் நூற்பா. 'ஆன்' என்பதில் 'ஆல்' என்பதும், 'ஓடு' என்பதில் 'ஒடு' என்பதும் அடங்கும். எனவே மூன்றும் வேற்றுமையுருபுகள் 'ஆன்' 'ஓடு' என்ற இரண்டுமாம் என்னலாம்.

தொல்காப்பியர்

ஆசிரியர் தொல்காப்பியர், 'ஒடு' என்பது ஒன்றையே மூன்றும் வேற்றுமை யுருபாகக் கூறினர். எட்டு வேற்றுமைகளின் பெயர்களை, உருபுகளைக் கொண்டு கூறவந்த ஆசிரியர், 'ஒடு' என்பதை இறுதியிலே கொள்ளும் வேற்றுமையை மூன்றும் வேற்றுமை யென்றார்.

''அவைதாம்,
பெயர் ஐ ஒடுகு
இன் அது கண்விளி என்னும் ஈற்ற'' (வேற்றுமை. 3)

என்பது அவர் நூற்பா. இந் நூற்பாவில் மூன்றும் வேற்றுமைக்கு 'ஒடு' என்பதொன்றே உருபாகக் கூறப்பட்டது. 'ஆன்' என்பது கூறப்படவில்லை.

மூன்றும் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும் என்பதை விரிவாகக் கூறவந்த நூற்பாவிலும் 'ஒடு' உருபு ஒன்றே கூறினர்.

''மூன்று குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே'' (வேற்றுமை. 12)

இந் நூற்பாவிலும் 'ஆன்' கூறப்படவில்லை. ஏன்?

ஒடு ஒன்றே கூறக் காரணம்

தொல்காப்பியர்க்கு முன் இருந்த ஆசிரியர்கள் மூன்றும் வேற்றுமைக்கு 'ஒடு' உருபு ஒன்றே கூறியிருப்பர். அவர்கள் காலத்து 'ஒடு' உருபு வினைமுதற் பொருளில் வருதற்குச் 'சாத்தனொடு கொற்றன் வந்தான்' என்று எடுத்துக்காட்டு காட்டியிருப்பர். இவ்வெடுத்துக்காட்டு உடன் நிகழ்ச்சிப் பொருளது. என்றாலும் வருதல் தொழிலுக்குக் கொற்றன் வினைமுதல் ஆதல் போலவே சாத்தனும் வினைமுதல் ஆதலின் முன்னோர்கள் அதனை வினைமுதற் பொருளதாகவே கொண்டிருப்பார்கள் என்னலாம்.

கருவிப் பொருளுக்கு அவர்கள் 'வாளொடு வெட்டினான்' என்றே எடுத்துக்காட்டு காட்டியிருப்பார்கள். அது 'வாளான் வெட்டினான்' என்ற பொருளதாகவே ஆளப்பட்டிருக்கும்.

எனவே, தொல்காப்பியர், தம் முன்னோர் நூல்களில் காணப் பட்டவாறே மூன்றும் வேற்றுமையுருபு 'ஒடு' என ஒன்றையே கூறினார். என்றாலும் அவர் காலத்திலேயே 'ஆன்' உருபும் பெரிதும் மூன்றும் வேற்றுமைப் பொருளில் வழங்கப் படுவ தாயிற்று. அதனைத் தள்ளுதற்கில்லை. அன்றியும் 'ஒடு' உருபை விடவும் 'ஆன்' உருபே பெருவழக்காக இருந்துளது. வினை முதற் பொருளிலும் கருவிப் பொருளிலும் 'ஒடு' உருபின் ஆட்சியைவிட 'ஆன்' உருபின் ஆட்சியே இலக்கியங்களில் பெரு வழக்காகியது. அதனால், தொல்காப்பியர், 'ஆன்' உருபையும் சேர்த்தேயாக வேண்டிய கட்டாயத்துக்குட்பட்டார். தம் முன்னோர் நூல்களுக்கேற்ப, "மூன்றா குவதே ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" என்றாராயினும் தம் கருத்தையும் சேர்த்தற் கேற்ப—அதாவது 'ஆன்' உருபும் மூன்றும் வேற்றுமைக் குரிய தாகும் என்பதற்கேற்ப,

> "அதனின் இயறல் அதற்றகு கிளவி
> அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
> அதனிற் கோடல்" (வேற்றுமை. 13)

என மூன்றும் வேற்றுமைப் பொருளில் வரும் வகைகள் பல கூறியபோது, 'அதனொடு இயறல்' என ஒடு உருபைக் கொடுத்துக் கூறாமல் 'ஆன்' உருபின் பொருள் புலப்படும்படி, 'அதனின் இயறல்' எனக் கூறியது காணலாம். 'அதனின் இயறல்' முதலியவற்றிற்கு எடுத்துக்காட்டு இரண்டு உருபு களிலும் வைத்துக் கூறலாம். வருமாறு :

1. அதனின் இயறல்—மண்ணுன் இயன்ற குடம்,
மண்ணெ டியன்ற குடம்

2. அதற்றகு கிளவி—அறிவான் அமைந்த சான்ரோர்
அறிவொ டமைந்த சான்ரோர்

3. அதனின் ஆதல்—வாணிகத்தான் ஆயினுன்.
வாணிகத்தொடாயினுன்.

4. அதனிற் கோடல்—காணத்தாற் கொண்டான்
காணத்தொடு கொண்டான்.

இவை நான்கும் கருவிப் பொருளன.

5. அதன் வினைப்படுதல்—சாத்தனுன் முடியுமிக்காரியம்.
சாத்தனெடு முடியுமிக் காரியம்.

இது வினைமுதற் பொருள்.

இவ்வைந்திலும் 'ஒடு' உருபு வழக்கு ஆசிரியர் காலத்தில் 'ஆன்' உருபு வழக்காகப் பெரிதும் மாறியதாகலாம். சேனவரையர்,

"இவ் வைந்து பொருளும் ஒடு உருபிற்கும் சிறு பான்மையுரிய வாயினும் பெரும்பான்மை பற்றி ஆன் உருபிற்கே யுரியபோலக் கூறினர்"

என்றெழுதியதும் இங்கு நோக்கத் தக்கது.

இனி 'ஒடு' உருபிற்கே சிறந்ததான உடன் நிகழ்ச்சிப் பொருளில் மூன்ரும் வேற்றுமை வரும் என்பதை,

"அதனெடு மயங்கல்
அதனெ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனெ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனெ டியைந்த ஒப்பல் ஒப்புரை"

என நான்கு வகைகளிற் கூறுமுகத்தான் 'ஒடு' சேர்த்தே கூறி யுள்ளார். அந் நான்கற்கும் தரப்படும் எடுத்துக்காட்டுகளாவன முறையே,

எண்ணெடு விராய வரிசி
ஆசிரியனெடு வந்த மாணக்கன்
மலையொடு பொருத மால்யானை
"பொன்னெ டிரும்பனையர் நின்னெடு பிறரே"

என்பன. இவற்றில் 'ஆன்' உருபு சேர்க்க இயலாது. சேர்ப்பின் பொருள் இயைபு இராது. எனவே, தொல்காப்பியர் காலத்தில் 'ஒடு' உருபு உடன் நிகழ்ச்சிப் பொருளில் பெரும்பான்மையும், வினைமுதல் கருவிப் பொருள்களில் சிறுபான்மையுமாகவும், 'ஆன்' உருபு உடன் நிகழ்ச்சிப் பொருளில் சிறுபான்மையும் வினைமுதல் கருவிப் பொருள்களிலே பெரும்பான்மையுமாகவும் வழங்கின என்பது அறியப்படும்.

'ஆன்' உருபையும் மூன்றும் வேற்றுமையுருபாக வெளிப் படையிற் கூருததன் காரணம் ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒவ்வோர் உருபே கூறுதலின் மூன்றுவதற்கும் ஓர் உருபு மட்டுமே சாலும் என்பதாகலாம். அன்றியும் தம்முன்னோர் கால உருபு அஃது ஒன்றேயாக இருந்ததும் காரணம் ஆகலாம்.

வழிநூல் கருத்து

வழிநூலாசிரியன் முன்னோர் மொழி பொருளே யன்றித் தன்கருத்துப் பொருளையும் ஏற்றிக் கூறலாம் ஆதலின், தொல்காப்பியர், தம் வழிநூலில், முன்னோர் மொழிந்த 'ஒடு' உருபைக் கூறித் தம் கருத்தாகிய 'ஆன்' உருபையும் கூறினர். 'அதனின் இயறல்' முதலியவற்றுல் ஆன் உருபின் பொருள் படக் கூறினர்.

> "தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றும்
> கடிநிலை யிலவே பொருள்வயி னான" (வேற். மயங் 12)

என்ற நூற்பாவில் மூன்றும் வேற்றுமை 'ஒடு' உருபிற்கின்றி 'ஆன்' உருபிற்கே யுரியதாகக் கூறினர். இந் நூற்பாவின் எடுத்துக்காட்டு 'புலிகொல் யானை வந்தது' என்பது. இது 'புலியைக் கொன்ற யானை வந்தது' என இரண்டாம் வேற்றுமை யிலும்' 'புலியாற் கொல்லப்பட்ட யானை வந்தது' என மூன்றும் வேற்றுமையிலும் வரும். இவ்வெடுத்துக்காட்டில் 'புலியொடு கொன்ற யானை வந்தது' என 'ஒடு' உருபு வாராதன்றே?

'அதனின் இயறல்' முதலியவற்றுலும். 'தடுமாறு தொழிற் பெயர்க் கிரண்டும் மூன்றும்' என்பதாலும் மூன்றும் வேற்றுமைக்கு 'ஆன்' உருபு வரும் என்பதைக் குறிப்பால் உணர்த்திய ஆசிரியர் உடம்பொடு புணர்த்தல் என்ற உத்தியால்,

> "ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்
> தாம்பிரி விலவே தொகைவரு காலை" (வேற்று. மயங். 14)

என்ற நூற்பாவிலும்,

"குஐ ஆன்என வருஉம் இறுதி
அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே" (வேற்று. மயங். 25)

என்ற நூற்பாவிலும் 'ஆன்' உருபை வெளிப்படையாகவே கூறி விட்டார். அன்றியும், மூன்றும் வேற்றுமைப் பொருளில் நான்கன் உருபு வந்து மயங்கும் எனக் கூற வந்தவர் "அதனுற் செயற்படற் கொத்த கிளவி" (வேற். மயங். 27) என்றுதாமே 'ஆன்' உருபை அமைத்துக் கூறியுள்ளார்.

முடிப்பு

எனவே ஆசிரியர் தொல்காப்பியர் வழிநூல் செய்தலின் முதல் நூலில் கண்டவாறு மூன்றும் வேற்றுமையுருபு 'ஒடு' என்று முதலில் கூறி வரையறை செய்து, பின்னர்த் தம் கருத்தாக - வழிநூற் கருத்தாக 'ஆன்' உருபைக் குறிப்பாகவும் உடம்பொடு புணர்த்தலால் வெளிப்படையாகவும் கூறினர் என்னலாம்.

தமிழின் அருமை

(ஆ. இனியன்.)

[நிலைமண்டில ஆசிரியப்பா]

தமிழ்தமிழ் எனவே தொடரா யொலிக்க
அமிழ்தமிழ் தெனவே ஆர்த்திடு மருமை
அருந்தமிழ் மொழிக்கே அமைந்த சிறப்பாம்;
அயல்மொழி யொன்றும் அதற்கிணை யலவே!

இயல்வழி யமைந்த இலக்கண முண்டு,
இயைபுடை நல்ல இலக்கிய முண்டு,
வியன்மிகு நிலைத்த வாழ்வும் உண்டு,
பயன்தரு மெங்கள் பைந்தமி ழுக்கே!

ஓமெனுஞ் சொல்லே ஒண்தமிழ்க் குரித்து,
ஆமிதை யேற்பர் அனைவரு மறிந்து;
நீரை யுடுத்த நிலமகட் கொளியே
பாரிற் சிறந்த பைந்தமிழ் மொழியே!

மென்மை தமிழின் மேலா மியல்பு
உண்மை தமிழின் உயர்வாந் துடிப்பு;
வண்மை தமிழின் வாழ்க்கைக் குறிப்பு
நன்மை தமிழ்நனி நல்குஞ் சிறப்பே!

குறளைத் தந்த குவலயத் தரசி
அறத்தைச் சொன்ன அருந்தமி ழன்னை;
மறத்தைக் கடியும் மறையுடைச் செல்வி
சிறப்பை யளிக்கும் தீந்தமி ழணங்கே!

அயிரியூர்

(இலக்கிய - வரலாற்று - கல்வெட்டு ஆய்வு)

(புலவர் பொன் முனியப்பன்

செயலர் வரலாற்றுப் பேரவை, கூவலூர் - 638313.)

நிறைபணிகளால், மறைந்துள்ள உண்மைகளை வெளிப் படுத்திவரும் கூவலூர் வரலாற்றுப் பேரவையினர் கடந்த 4-8-79 ஆம் நாளன்று, கோபி செட்டிபாளையம் நகரத்திற்கு அண்மையில் இருக்கும் நம்பியூர் - குருமந்தூர் சாலையின் நடுவில் உள்ள அயலூர் என்னுமிடத்தில், காட்டுப் பகுதியில் புதைந் திருந்த கல்வெட்டு ஒன்றைக் கண்டனர். நிலத்தை அகழ்ந்து எடுத்து அக் கல்வெட்டு படிக்கப்பட்டது.

இக் கல்லில் திருமால் கோயிலுக்கு விடப்பட்ட நிலம்பற்றிய குறிப்பு உள்ளது. திருவிடையாட்டம் பற்றிய கல்வெட்டு இது. இதில் அயிரியூர் என அவ்வூரின் பெயர் மிக அழகாக வெட்டப்பட் டுள்ளதை யாவரும் காணலாம். ஆயின் இன்று அவ்வூர் 'அயலூர்' என வழங்கப்படுகிறது.

செப்பமிக்க தமிழ்ப் பெயரைத் திரித்த கொடுமைக்காக இவ் வூர்மக்கள் இன்று 'அயலாராக' இருக்கின்றார்கள். இந்த அயிரியூர் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்புடைய மிகப் பழைய ஊர்களில் ஒன்று. இது குறித்த இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளை இனி நோக்குவோம்:

அயிரிமலை என்றும், அயிரியாறு என்றும், அயிரிக் கொற்றவை என்றும் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் பெயர் பெற்று விளங்கிய மலை, ஆறு, கொற்றவை பற்றிப் பதிற்றுப்பத்திலே கூறப் பட்டுள்ளது.

பெரியாறு அல்லது பேரியாறு என்னும் ஓர் ஆறு மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் தோன்றுகின்றது. அந்த ஆறு தோன்றும் மலையே அயிரிமலை என்பது. இப் பெயர் அயிரை மலை என்றும் வழங்கும்.

'நேருயர் நெடுவரை அயிரைப் பொருந' — பதிற்: 21, 29

'அயிரை நெடுவரை போலத், தொலையா தாகநீ வாழு நாளே'
—பதிற்: 70. 26-7

'கடவுள் அயிரையின் நிலைஇக், கேடில வாக பெருமநின் புகழே,
—பதிற்: 79. 18 - 19.

என்பன போன்ற பதிற்றுப்பத்தின் கூற்றுகள் அயிரை மலையின் நெடுந் தோற்றத்தையும், அதில் எழுந்தருளியிருந்த கடவுளையும் பற்றி விளக்குகின்றன. அக் கடவுள் கொற்றவையே என்பதை இந் நூலின் பிற இடங்களில் உள்ள தொடர்கள் குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:

‘இருங்கடல் நீரும் ஒருபகல் ஆடி, அயிரை பரைஇ’
—பதிற்; 3ஆம்பதிகம்

‘உருகெழு மரபின் அயிரை பரைஇ’ —பதிற்: 88, 12.

சிலப்பதிகாரம் இவ்வயிரைக் கொற்றவையைக் கூறும் முறையில் பதிற்றுப்பத்தை ஒத்து விளங்குவது நோக்கத்தக்கது. அஃதாவது,

‘உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோன்’ —சிலப்: 28, 145 - 146.

என்பது அது.

வையை யாற்றின் வழியே சென்ற கண்ணகி இந்த அயிரை மலையில் சென்றுதான் உயிர்நீத்தாள். தன் குலமலையில் வந்து உயிர் நீத்தமையாலே பூம்புகார்க் குலக்கொடிக்குப் பனிமலையில் கல்லெடுத்துக்கோயில் நிறுவினான் சேரன் செங்குட்டுவன்.

இந்த அயிரிமலையில் உள்ள அயிரிக் கொற்றவையே சேர வேந்தர்களின் குலதெய்வமுமாகும். இம் மலையில் தோன்றும் அயிரியாறு இம் மலையின் மேற்குப் பக்கமாகத் தரையில் இறங்கிப் பேரியாறு என்னும் பெயர் பெற்றுச் சேரநாட்டில் பாய்ந்து, வஞ்சிமாநகர் வழி யோடி முசிறித் துறைமுகத்தில் கடலில் கலந்தது.

அயிரியாறு பேரியாறாகப் - பெரியாறாகப் பெயர் பெறும் இடத்தில்தான் செங்குட்டுவன் ஆண்டுதோறும் சென்று தன் சுற்றத்தோடு தங்கி வேனிற்காலத்தைக் கழித்தான் என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

என்வே, அயிரிமலையும், அங்கு ஓடிய ஆறும், அயிரிக் கொற்றவையும் சேரர் காலத்தில் பெரும் புகழ் பெற்ற இடங்களாய் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களாய்த் திகழ்ந்தன என்பதை அறிகின்றோம். இப் புகழ்வாய்ந்த அயிரி - அயிரை என்னும் பெயர் மீன் வகைகளில் ஒன்றையும் குறிக்கும். இதனைத் ‘தடந்தாள் நாரை யிரிய அயிரைக் கொழுமீன்’ (பதிற்: 29, 4-5) எனப் பதிற்றுப்பத்து பகர்கின்றது.

அன்று பல்வேறு வகையில் புகழ்பெற்றிருந்த இந்த அயிரிமலையில் அயிரியூர் என்ற ஊர் இருந்ததா என்பதுபற்றி அறிய முடியவில்லை. இப்போது கண்டுபிடித்துள்ள அயிரியூர் என்னும் பெயர் பொறித்த கல்வெட்டு இந்த அயிரிமலைக்கு ஓரளவு தொலைவில், கொங்குநாட்டில் உள்ள ஊராகும். இதனைக் கொண்டு அயிரியூர் என்னும் பெயரமைந்த வூர் அக்காலத்தில் அம்மலையில் இருந்திருக்கும் எனக் கருதலாம்.

சேரர் நாட்டின் சிறப்புவாய்ந்த இப்பெயர் இற்றைக்கு நானூறு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்புவரை மருவாமல், சிதையாமல் மாண்புற்று விளங்கியது என்பதைப் பூவாணி (பவானி) யாற்றின் தெற்கே கிடைத்த, இதுநாள்வரை மறைந்திருந்த கல்வெட்டால் அறியமுடிகின்றது.

கல்வெட்டில் அயிரியூர் எனத் தெளிவாக இருக்கின்ற அருந்தமிழ்ப் பெயர், பாண்டியன் பட்டயத்திலும், காணிப்பாடல்களிலும், கொங்குமண்டல சதக ஊர்த் தொகையிலும் சிறிது மருவியே வழங்கியுள்ளதைக் காண்கிறோம்.

பாண்டியன் பட்டயம், பாண்டியன் அதிகன் என்னும் சேர மன்னனைப் புறங்கண்ட ஊர்களைப் பற்றிக் கூறுமிடத்தில், 'ஆயிர வேலி அயிரூர் தன்னிலும், புகழியூரிலும் திகழ்வேல் அதிகனை, ஒருபுறம் கண்டோன்.......' எனக் கூறுகின்றது. பட்டயத்தில் காணப்படும் அயிரூர் என்னும் பெயர், கொங்குநாட்டுக் காணிப் பாடல்களில் அயிலூர் எனத் திரிந்துள்ளது.

வடகரைக் கவுண்டர்களின் காணிப்பாடலில் 'குளப் புல்லூரும்.......மருவுபுகழ், அயிலூருடன்........'என்றும்; ஆந்தை குலத்தாரின் காணிப்பாடலில் 'அத்தனூர் அயிலூர்......'என்றும்; கொங்குமண்டல சதக ஊர்த் தொகையில் 'குருமந்தூர் கோசனம் செவியூர் அயிலூருடன்' என்றும் இவ்வூர்ப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இத்துணையும் நோக்கிய வழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், அயிரியூர் எனப் புகழ்பெற்ற ஊர் பட்டயங்களில் ஆயிரூர் எனச் சிறிதே மருவியும்; காணிப் பாடல்களில் அயிலூர் என ரகரம் லகரமாய் மாறுபட்டும், இன்றோ இரண்டாம் எழுத்தின் இகரம் கெட்டு அகரமாய்த் திரிந்து அயலூர் எனப் பொருட் சிதைவுற்றும் பொன்றியும் போய்விட்டது.

இவ்வூர் நிலத்தில் புதைந்திருந்த கல்வெட்டை அகழ்ந்து காண, அக் கல் நமக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட

எழிற்பெயரைக் காத்துக் காட்டி நிற்கும் காட்சியே, இன்று இக் கல்வெட்டின் அரிய சிறப்பாய்த் திகழ்கிறது.

இக் கல்வெட்டுக் காலத்திற்குச் சிறிது முந்திய ஒரு கல்வெட்டு, இவ்வூருக்கு அருகில் உள்ள நம்பியூரில் கிடைத்துள்ளது. அது வல்லாளதேவன் காலத்துக் கல்வெட்டு. இக் கல்வெட்டு பழம்பெயரைப் போற்ருமல், காணிப் பாடல்களைப் போன்றே 'குறும்பு நாட்டிலேயுள்ள அயிலூர்' எனக் குறித்துள்ளது.

காலத்தால் சிறிது முந்திய கல்வெட்டு திரிந்த பெயரைக் குறிப்பிட, அதற்குப் பிந்திய கல்வெட்டோ திருத்தமான பெயரைக் குறிப்பிடுவது ஏன்? என்று எண்ணிப்பார்க்கையில் ஓர் உண்மை புலப்படுகிறது.

அஃதாவது, இன்றும் கொங்குநாட்டில் பேச்சு வழக்கோடு வினவப்பெறும் வினு, 'உனக்குக் கொஞ்சமாவது அறிவு நினைவு இருக்கா?' என்பது. இந்த அறிவு நினைவும், வரலாற்றுணர்வும், திருத்தமுறக் கற்ற மொழிக் கல்வியும் (எதையும் திருத்தமாய்க் கற்பதுதான் கல்வி. 'கற்க கசடற' என்னும் குறளையும் உள்ளத்தில் எண்ணி ஒப்பிட்டு நோக்குக) உடையவர்களின் மேற்பார்வையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் திருத்தமான செப்பமான அமைப்பைப் பெற்று விளங்குகின்றன என்பதும், பிற அத்தகைய தன்மையின்றித் திரிவும், சிதைவும், குலைவும் உற்று அமைந்துள்ளன என்பதும் புலனுகின்றது.

இன்றும் மொழிப்புலமை உடையவரின் மேற்பார்வை - கண்காணிப்பு இல்லாத நாளிதழ்களும், பெயர்ப் பலகைகளும், விளம்பரங்களும், பிறவும் எத்துணை தமிழ்க்கேடு புரிந்துகொண்டிருக்கின்றன என்பதைக் காணுகின்ருேம். இஃது அன்றைய கல்வெட்டுப் பொறிப்புகளோடும் ஒப்புநோக்கத் தக்கது.

எவரும் எந்நிலையிலும் மொழிக்கேடு புரியாமல் காக்கும் கடமை அரசுக்கு உண்டு. திருத்தமில்லாத எதுவும் வருத்தமும் இடரும் தருவது இயல்பே. இது இயற்கையாய்த் தெரிந்தது தான் என்ருலும் 'அயிரியூர்' காட்டும் வரலாற்றை உளங்கொண்டாவது நாளிதழ், பெயர்ப்பலகை, விளம்பரம் முதலான எதுவும் மொழிப்புலமையரின் ஒப்பம் பெற்றே வெளிவர வேண்டுமெனச் சட்டம் இயற்றுதல் அறிவுக்குத் துணைசெய்யும் அரும்பணியாகும்.

———

பெரும்பெயர் பெற்ற பெருங் கழகம் பெருவாழ்வு பெறுக:

(பேராசிரியை கிருட்டிணு சஞ்சீவி,

டாக்டர் ந. சஞ்சீவி)

I

திருவள்ளுவர் ஆண்டு 2010 தைத்திங்கள் வெளிவந்துள்ள 'செந்தமிழ்ச் செல்வி' தலையங்கம் கண்டோம். பவளவிழாக் கண்ட தாமரைத்திரு வ. சுப்பையா அவர்களின் பழுத்த எழுத்தின்—எழுத்துப் பழத்தின்—அழகும், மணமும், சுவையும் நெஞ்சை அள்ளும் நீர்மையனவாய் விளங்குகின்றன. மணிவிழாக் காணும் மாண்பு பெற்றுள்ள (1) திருநெல்வேலி (2) தென்னிந்திய (3) சைவ (4) சித்தாந்த (5) நூற் (6) பதிப்புக்கழகத்தின் அணி விழாவைத் 'தமிழ் கூறுநல்லுலகம்' எட்டுத்திக்குகளிலும்—ஏன்?- பத்துத் திக்குகளிலும் பட்டொளி புரியும் வண்ணம்—எதிரொலி செய்யும் வண்ணம்—கொண்டாடுதல் தனிப்பெருந் தாய்மொழி—தாய் நாட்டுக் கடமையாகும். காரணம்: தமிழர்கள் அமைப்படிப் படையில் ஆக்கவேலை செய்தல் அரிது. விதிவிலக்காகத் திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் போன்ற அமைப்புகள் மணிவிழாக் கொண்டாடும்போது தமிழ்மக்கள்—தமிழ் போற்றும் மக்கள்—கழகத்தின் மணிவிழாவைத் தங்கள் தங்கள் வாழ்வின் மணிவிழா—மணவிழாவாக மதித்து மகிழ்ந்து போற்றுதல்வேண்டும்.

II

(1) திருநெல்வேலி (2) தென்னிந்திய (3) சைவ (4) சித்தாந்த (5) நூல் (6) பதிப்புக் (7) கழகம் எனும் தலைப்பே தனிச் சிறப்பு வாய்ந்த சொற்களைக் கொண்டதாய் உள்ளதை எண்ணிப் பார்த்தல் ஏற்றம் தரும். தமிழகத்தின்—ஏன்?—இந்தியாவின் தென்கோடி மாவட்டங்களுள் ஒன்று திருநெல்வேலி; மற்றொன்று கன்னியாகுமரி. இந்த இரு மாவட்டங்களும் இணைந்த பகுதியே பழைய பாண்டிய நாட்டின் தென்பகுதி. இன்றும் பொருநை பாயும் பெருமையுடையதாய் விளங்கும் இயற்கை வளமுடைய மாவட்டம் திருநெல்வேலிதான். அவ்வாறே மலையாளமாய் மருவாத மரபுத் தமிழாய் முழங்கும் முதுமைத் தமிழை முழுமையாகப் பெரிதும் இன்றும் காணக்கூடிய இடம் திருநெல்வேலி மாவட்டம்தான். இன்னும் சொன்னால், கடல் கொண்ட தமிழ

கத்தின் வரலாற்றையும் வாழ்க்கையையும் அறிந்து கொள்ள அரிய பெரிய பொருள்களைத் தன் அகட்டில் (=அடிவயிற்றில்) புதைத்து வைத்துக்கொண்டுள்ள மாவட்டம் திருநெல்வேலி மாவட்டமே ஆகும். தமிழ்நாட்டு ஆறுகளுள் தென்பொதிகை மலையின் காட்சியோடு கலந்து விளங்கும்—சிந்து பூந்துறையோடு சிறந்து விளங்கும்—செம்மை சான்றது நெல்லையின் எல்லையில் பாயும் பொருநை. தென்கோடி—Deep South—என்னும் பெருமை யுடைய மாவட்டத்திற்குப் பெயர் தரும் திருநெல்வேலி என்ற சொற்றொடரே திரு+நெல்+வேலி, என்ற செந்தமிழ்ச்சிறப் புடைய மூன்று எண்ணுகிய சொற்களின் சேர்க்கையாய் உள்ளது சிந்திக்கத் தக்கது. தனித்தமிழுக்காக வேறு எந்த அரசியல் கட்சியுடனும் ஒப்பிட முடியாத அளவிற்குப் பேரம் பேசாமலும்—சோரம் போகாமலும்—கற்புக் கடமை ஆற்றி வந்துள்ள அமைப்பு திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமே ஆகும். இவ் வுண்மையை எடுத்த எடுப்பிலேயே எவருக்கும் உணர்த்துவது போல் அமைந்துள்ள ஒரு பெருஞ் சொல்லே 'திரு' என்பதாகும். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தனது 1436 ஆம் வெளியீடாக வெளியிட்டுள்ள—புலவர் இரா. இளங்குமரன் தொகுத்த மிகச் சிறந்த குறிப்புதவி (reference) நூலாகிய—'உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம்' (1971) என்னும் நூலில் 'திரு' என்ற சொல் பெற்றிருக்கும் ஒளி வருமாறு:

திரு: திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றது அழகு. இஃதென் சொல்லியவாறோ எனின், யாவன் ஒருவன் யாதொரு பொருளைக் கண்டானே அக்கண்டவற்கு அப்பொருள்மேல் சென்ற விருப்பத்தோடே கூடிய அழகு. அதன்மேல் அவற்கு விருப்பம் சேறல் அதனில் சிறந்த உருவும் நலனும் ஒளியும் எவ்வகையானும் பிறிது ஒன்றற்கு இல்லாமையால் திரு என்றது அழகுக்கே பெயர் ஆயிற்று. அங்ஙனம் ஆயின் இது செய்யுளின் ஒழிய வழக்கினும் வருவது உண்டோ எனின், உண்டு; கோயிலைத் திருக்கோயில் என்றும், கோயில் வாயிலைத் திருவாயில் என்றும், அலகைத் திருவலகு என்றும், பாதுகையைத் திரு வடி நிலை என்றும் வழங்கும் இத்தொடக்கத்தன எல்லாம் திருமகளை நோக்கி எழுந்தனவல்ல. அது கண்டவனுடைய விருப்பத்தானே எழுந்தது. ஆதலானும் திரு என்பது அழ கென்றே அறிக. அதனல் திருவென்பது கண்டாரால் விரும்பப் படும் தன்மை நோக்கமே. (திருக்கோ. 1. பேரா.)

(2) திருவென்பது பொருள் உடைமையும், பொருள் கொணர்ந்து துய்த்தலும் இன்றி எஞ்ஞான்றும் திருத்தக விற்று ஆயதோர் உள்ள நிகழ்ச்சி. அது வினையுள் உடைமை (தீவினைக் காலத்தும் செல்வம் உடையர் போல் இருத்தல்) எனப்படும்.

(தொல். பொருள். 273. பேரா.)

மேற்கண்ட சொற்பொருள் மேன்மை படைத்த திரு என்ற சொல்லின் தொன்மை பற்றித் தொல்பொருள் ஆய்வுத் துறையும் மேளம் கொட்டுகிறது. தமிழகத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறையில் பேராக்கங்கள் புரிந்து வரும் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தாம் எழுதியுள்ள அரியதொரு சாதவாகன நாணயம் பற்றிய கட்டுரையில் தமிழ் மன்னர் அல்லாத வேந்தரும் 'ஸ்ரீ'க்கு வேருக—ஆனால் ஒப்பாக—'திரு' என்பதைப் பயன்படுத்தி யுள்ளமையை உண்மை நிழற்படச் சான்றுகளுடன் உறுதிப்படுத்தி யுள்ளார்.

இவ்வாறு தொல்பொருள்—இலக்கியச் சான்றுகளாலும் உரம் பெறும் வரமுடையது திரு. சுருங்கச் சொன்னால் தமிழின் தனித்தன்மையையும் அனைவரும் மதிக்கத்தக்க அனைத்து வளத் தையும் அறிவிக்கும் ஓர் அறிகுறியே 'திரு'. இத் திருவில் உலக (material) வளங்களும் அடங்கும்; உணர்வியல் (spiritual) வளங் களும் அடங்கும்.

திருநெல்வேலி என்ற தொடரில் நடுநாயகமாக உள்ள சொல் நெல் என்பதாகும். 'நெல்' என்பதற்குச் சொல் என்ற பொருளும் உண்டு.

''சொல்......இறைஞ்சிக் காய்த்தவே'' (*சீவக சிந்தாமணி* 53)

நெல் இல்லையேல் உலக வாழ்வு—உயிர்வாழ்வு இல்லை. சொல் இல்லையேல் உணர்வு வாழ்வு—உயர்வு வாழ்வு—இல்லை.

நெல்லை அடுத்து 'வேலி' என்ற சொல் விளங்கக் காணு கிறோம். இச் சொல்லுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி 1. அரண், 2. மதில், 3. காவல், 4. நிலம், 5. வயல், 6. 6.74 ஏக்கர் நில அளவு, 7. பசுக்கொட்டில், 8. ஊர், 9. வேலிப்பருத்தி, 10. முள்இலவு, 11. ஓசை, 12. காற்று என்ற பொருள்களைத் தருகிறது. இவற்றுள் ஈண்டு நாம் சிறப்புடைய தாய்க்கருதத் தக்க பொருள்கள் 1. வயல், 2. நிலப்பரப்பு அளவு, 3. அரண். ஒரு நாட்டிற்கே வரையறையாய்—விளங்குவன பரப்பும் அப் பரப்பிற்குப் பாதுகாப்பான எல்லை அரணுமே ஆகும்.

இக் கருத்தை—கோட்பாட்டை அறிவுறுத்துவதாகவும் அமைந்துள்ளது திருநெல்வேலி என்ற தொடரில் இறுதியாகவும் உறுதியாகவும் அமைந்துள்ள வேலி என்ற சொல்.

அருவி ஆறுவது போல—அருமை பெருமை ஆவது போல—அரும்பு மலராவது போல—மழலை மனிதனுவது போல—ஊரின்பெருக்கமே நாடும் உலகும். இவ் வளர்ச்சி நெறியைக் காட்டுவது போல அடுத்து நம்மை எதிர்கொள்ளும் தொடர் 'தென்னிந்தியா' என்பது ஆகும். சேய்மைக் காலச் செய்திகளாலும், அண்மைக் கால ஆய்வுகளாலும் உலக முதன்மொழி தமிழாகவே இருந்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. மொழியின் கூறுகள் நாகரிக—பண்பாட்டு மூப்பையும் பளிச்சிட்டுக் காட்டும். அவ்வகையில் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் வற்புறுத்துவது போல் குமரிக்கண்ட மக்களே உலகெங்கும்—இமயம் வரையேனும் பெருகி மண்டியிருத்தல் வேண்டும். ஈண்டு, பருவ காலங்களின் தோற்றமும் நிலநடுக் கோட்டுப் பகுதியிலேயே தோற்றம் ஆவது ஒப்பாக ஓர்தற்குரியது. எனவே வட இமயம் வரை பெருகியிருந்த குமரிக் கண்ட மக்களின் ஒரு காலப் பெருக்கம் புதுவெள்ளத்தால் பழைய வெள்ளம் பின்தள்ளப்படுவது போல் பிற பண்பாட்டார் பெருக்கத்தால்—நெருக்கத்தால்—தென் திசைக்குத் தள்ளப்பட்டது எனலாம். அதன் வெளிப்படை வாய்மைச் சான்றுகளாக விளங்குவன இரண்டு. ஒன்று: தென்னிந்திய மொழிகளிடையே காணப்படும்—வட இந்திய மொழிகளுக்கு வேருன—வேரான—தென்னக மொழிகளின்—இலக்கியங்களின்—நாகரிகத்தின்—ஒருமைப்பாடு. இரண்டு: வட இந்திய மொழிகளிலே திராவிடக் கூறுகள் நுண்மையாகக் கலந்திருத்தலும், சோட்டா நாகபுரி போன்ற இடங்களில் வாழும் பழங்குடி மக்கள் மொழியிலே வெளிப்படையாகக் காட்சியளித்தலும் ஆகும். இவ்விரு சான்றுகளையும் ஆயிரம் வகையிலும் ஆராய்ந்து அனைத்துலகமும் கண்டு வியந்து மகிழ்ந்து போற்றும் வகையில் கடந்த பத்து ஆண்டுகளாகப் பேராசிரியர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் உருவாக்கியுள்ள திராவிட மொழியியல் கழகம் (Dravidian Linguistic Association) ஆற்றிவரும்—ஆக்கி வரும்—அரும் பணிகள் பல ஆகும். இதனுல் திருநெல்வேலி விரிவடைந்து தென்னிந்தியாவாக மலர்ச்சி பெறுதல் பொருத்தமே ஆகும் என்பது புலப்படும்.

ஒரு நாகரிகம், அல்லது பண்பாட்டின் உயர்நிலை அதனுடைய சமய அல்லது தத்துவத்தெளிவே ஆகும். அவ்

வகையில் முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் தத்துவ உலகின் தனிப் பெருஞ் சிறப்பாய்—தமிழ்ப் பண்பாட்டின் பேரொளியாய் விளங்குவது சைவமே ஆகும். இதுபற்றிப் பேரறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் மறைமலையடிகளாரும் எழுதியுள்ள நூல்கள் போதுமான விளக்கம் தருவன ஆகும். இவ் விளக்கம் அயல் நாட்டு அயல் சமயத்தவராகிய டாக்டர் போப் போன்றவர்கள் புகழுரையாலும் வளம்பெறும்.

பல்வகையாய்ப் பருமையும் பரவுதலும் பெற்ற சைவத்தின் சிரோன்மணியாய்த் திகழ்வது சித்தாந்தமே ஆகும். இதன் தனிப்பெருஞ் சிறப்புகள் குறித்துப் பழமையாக மறைமலையடிகளார் போன்ற பேரறிஞர்களும் டாக்டர் போப் போன்ற பெருமக்களும் இந்நாளில் திரு. க. வச்சிரவேலு முதலியார், திரு. நல். முருகேச முதலியார் போன்றவர்களும் தந்துள்ள விளக்கங்கள் தக்கனவாம்—அறிவுடையார் நெஞ்சில் தக்குதற்குத் தக்கனவாம். மெய்ம்மை இயலுக்கு (realistic) மிகவும் பொருத்தமுடையதாய் விளங்கும் மெய்ப்பொருள் சைவ சித்தாந்தம். இதன் சிறப்பே தமிழ் இனத்தின் தனிப்பெருஞ் சிறப்பு. இதனால் மூன்றும் சொல்லாக—சொற்றொடராக முப்பொருள் உண்மை முழங்கும் சைவசித்தாந்தம் என்ற தொடர் கழகத்தின் பெயரில் இடம் பெற்றிருத்தல் இனிய—பெரிய பொருத்தமே ஆகும்.

(தொடரும்)

———

பெரிய தொரு குறைபாடே !

"வடமொழியிற் பண்டைத் தமிழாசிரியர் ஆக்கிவைத்த பழைய உபநிடதங்கள், சாங்கியம், யோகம், நையாயிகம், வைசேடிகம், வேதாந்தம் முதலான அறிவு நூல்களையும் பின்றைத் தமிழ்ப் புலவர் எவருந் தமிழில் மொழிபெயர்த்து வையாததும் பெரிய தொரு குறைபாடேயாம். இனியேனும் நம் செந்தமிழ்ப் புலவர்கள் பண்டை நந் தமிழாசிரியர் காட்டிய மெய்ந்நெறியே கடைப்பிடித்துத், தனித் தமிழில் மெய்யறிவு நூல்கள் மெய்யுணர்வு நூல்கள் இயற்றித் தமிழை வளம்படுத்து நந்தமிழ் மக்களைச் சிறந்த துறைகளெல்லாவற்றிலும் முன்னேற்றி நலம் பெருக்குவாராக !"

—மறைமலையடிகளார்

(முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக். ௧௯0)

தமிழர்க்குச் சாவில்லை!

(புலவர் ப. எழில்வாணன், பள்ளபட்டி.)

நொடிதோறும் தமிழ்நினைவில் இருந்திடுவேன்;— நாளும்
நூறுதமிழ் நூல்களெனில் படித்திடுவேன்!
படிதோறும் தமிழ்முழங்க உழைத்திடுவேன்;—உழைப்பில்
பயனில்லையேல் என்னுடலை அழித்திடுவேன்!

என்னுடலும் அலையும்வரை பாடிடுவேன் ;—ஆசை
எல்லையினைத் தமிழ்பாடி அடைந்திடுவேன்!
மண்ணுலகில் தமிழ்கேட்க வந்துவிட்டேன்;—என்
மனமுயிரைத் தமிழுக்கே தந்துவிட்டேன்!

எனக்கென்றே உயிருமில்லை கூறுகின்றேன்;—உண்மை
இதுவென்றே மறுபடியும் கூறுகின்றேன்!
எனக்கென்றே இருப்பதிங்கே யாக்கையொன்றே;—அதை
இயக்குவதும் அழிவில்லாத் தமிழொன்றே!

மண்ணுலகில் உடல்போயும் வாழ்ந்திடுவேன்;—உயிர்
மறத்தமிழாய் இருப்பதினால் சூழ்ந்திடுவேன்!
விண்ணுலகில் இடமில்லை என்றனுக்கே;—என்னுயிர்
வையத்தினில் தமிழுடனே ஒன்றிடுமே!

இவ்வுலகில் இறப்பில்லை என்னுயிர்க்கு;—ஆனால்
என்னுடலும் அழிவதுண்டு தமிழுக்கு!
எவ்வளவு தொல்லையிலும் வாழ்ந்திடுவேன்;—என்றன்
எல்லையில்லாத் தமிழினிலே மூழ்கிடுவேன்!

என்னுயிர்க்கும் இறப்பில்லை என்பதுபோல்—தமிழுடன்
எத்தனைபேர் வாழ்கின்றார் எண்ணிடுவீர்!
முன்னிலையில் நின்றவர்கள் எத்தனைபேர்?—அவர்
முடிவில்லா உயிர்தமிழே அறிந்திடுவீர்!

என்றதனால் தமிழர்க்கும் சாவில்லை ;—முன்பு
இருந்தோர்க்கும் உயிர்சிறிதும் போகவில்லை!
இன்றளவில் தமிழ்வாழ எதுவென்றால்—தமிழில்
எம்முன்னோர் உயிரெல்லாம் இருப்பதொன்றே!

———

தமிழில் பதிப்புக்கலை

[அ. ம. சத்தியமூர்த்தி
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு]

(முன் இதழ் ௩௬௪ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல அடிகள் கொண்ட சூத்திரங்கள் பா முறையில் அமைக்கப் பட்டிருக்காமல் தொடர்ந்து உரைநடை போல எழுதப்பட்டிருக்கும். உரைப் பகுதியில் சூத்திர விளக்கமும் எடுத்துக்காட்டுப் பகுதியும் ஒன்றே போல் அமைந்திருக்கும். சொல்லுக்குச் சொல் இடைவெளி இராது, இவற்றை நோக்குமிடத்து, ஏட்டில் உள்ளவாறே, அச்சில் தொடக்க காலத்தில் பதிப்பித்தனர் என்பது விளங்கும். இத்தன்மை அந் நூற்றாண்டின் பிற்பகுதியில் வந்த பதிப்புகளில் மாற்றம் பெறத் தொடங்கியது. அந்த மாற்றத்தை இரு வகையில் அடக்கலாம். அவை,

(1) எழுத்து வடிவ மாற்றம்.

(2) வரி வடிவ மாற்றம்.

இவற்றைச் செய்தோர் பற்றியும், செய்த முறைபற்றியும் இவண் காண்போம்.

(1) எழுத்து வடிவ மாற்றம்:

சுவடிகளில் காணப்படும் குறிலுக்கும் நெடிலுக்குமுள்ள வேறுபாடு, மெய்யெழுத்துக்கும் உயிர்மெய் யெழுத்துக்குமுள்ள வேறுபாடு முதலியவற்றையும் இன்ன பிறவற்றையும் படிப்பவர் களே உணர்ந்துகொள்ள வேண்டும். இவ் வகையில் வீரமா முனிவர் முதன்முதலில் எழுத்துக்களில் சில அடிப்படையான மாற்றங்களைச் செய்தார். குறிலுக்கும் நெடிலுக்கும் ஒரே வகையில் எழுதப்பட்டு வந்த கொம்பினை மேலே சுழித்து 'ே' என இருந்தால் நெட்டெழுத்தைக் குறிப்பதாகவும், 'ெ' என இருந்தால் குற்றெழுத்தைக் குறிப்பதாகவும் மாற்றியமைத்தார். குறிலுக்குமேல் நீண்ட புள்ளியையும் (—), மெய்யெழுத்துக்கு மேல் சுழித்த புள்ளியையும் (0) இடவேண்டும் என்று தமது தொன்னூல் விளக்கத்தில் கூறியுள்ளார்.[9]

உ - ம்: எ̄ரி, ஒ̄தி; மண், கண்

9. சம்பந்தன் மா. சு, அச்சுக்கலை, பக்கம் 138.

இவ்வாறு தமிழ்ச் சொற்களை மயக்கமின்றிப் படிக்க வீரமா முனிவர் வழி வகுத்ததால்தான் தற்காலத் தமிழ் வரி வடிவின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

(2) வரி வடிவ மாற்றம் :

தொடக்க காலத்தில் பல பதிப்புகளில் ஓலைச் சுவடியில் உள்ள வாறே பதிப்பிக்கப்பட்ட போதும், சி. வை. தாமோதரம் பிள்ளை தமிழ் வரிவடிவமாற்றத்திற்கு வித்திட்டார்.[10] இவருடைய பதிப்பு களில் பெரும்பாலும் மூல பாடம் பெரிய எழுத்திலும், உரை அதனினும் சிறிய எழுத்திலும் இருக்கும். சூத்திரக் கருத்து, விளக்கம், பொருள், எடுத்துக்காட்டு ஆகியவை தனித்தனிப் பத்திகளாகக் காணப்படும். சொல்லுக்குச் சொல் இடைவெளியிட்டும், கடின சந்திகள் ஓரளவு பிரிக்கப்பட்டும் இருக்கும். ஆயினும் பிள்ளையவர்கள் இட்ட வித்தினைத் தழைக்கச் செய்த பெருமை டாக்டர் உ. வே. சாமிநாதையரையே சாரும்.

ஆயினும் சில பதிப்பாளர்கள் படிப்போர் எளிதில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் சீர் பிரிக்குமிடத்துப் பாவின் யாப்பு நெறியைச் சிதைத்து விடுகிறார்கள். அவ்வாறின்றிச் செய்யுள் இலக்கணத்தையும், படிப்போரையும் மனத்திற்கொண்டு வரிவடிவில் செய்யப்படுகின்ற மாற்றத்தை உடையதே சிறந்த பதிப்பாக அமையும்.

IV. நிறுத்தக் குறியீடுகள் :

நிறுத்தக் குறியீடுகள் அமைப்பது தமிழ் இலக்கிய, இலக்கண வரலாற்றில் ஒரு புதிய கலையாகும். காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, உணர்ச்சிக்குறி, வினாக்குறி முதலிய நிறுத்தக் குறியீடுகள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் தழுவிக் கொள்ளப் பட்டவைகளாகும். எனவே, இவற்றைக் காலத்திற்கேற்ற வளர்ச்சி நிலையாகக் கொண்டு, தமிழ் இலக்கண மரபிற்கு ஊறு விளைவிக் காத வகையில் பயன்படுத்திக் கொள்வதே பொருத்தமுடைய தாகும்.

காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறி, இரட்டை மேற்கோட்குறி, ஒற்றை மேற்கோட்குறி, தொடர் விடுபாட்டுக்குறி, விடுகுறி, மேற்படிக்குறி, உடுக்குறி, இணைப்புச் சிறுகோடு, இடைப்பிறவரல் வைப்புக்குறி'

10. சண்முகம் பிள்ளை மு, 'தொல்காப்பியப் பதிப்புகள், தமிழாய்வு - தொகுதி 8, பக்கம் 213.

பிறைக்குறி, பகர அடைப்புக்குறி, இலக்கியப்புள்ளி முதலியவற்றை நிறுத்தக் குறியீடுகளாகக் காட்டுவார் அ. கி. பரந்தாமனர்.[11]

V. அச்சுக்குமுன் கையெழுத்துப்படியைச் சீர்திருத்தல்:

ஒரு நூலை அச்சுக்குக் கொண்டுவருமுன் அதன்கண் நாம் சில சீர்திருத்தங்களையும் செய்ய வேண்டியுள்ளது. அவை,

(1) தெளிவாகத் தெரிந்த பிழைகளைத் திருத்த வேண்டும்.

(2) பாட வேறுபாடுகள் இருப்பின், சிறந்த ஒன்றை மூலமாக அமைத்துவிட்டு, பிறவற்றை அடிக்குறிப்பில் சுட்ட வேண்டும்.

(3) பொருளின் அமைப்புக்கேற்ப, பத்தி முதலியவற்றைப் பிரிக்க வேண்டும். மூலம், உரை, விளக்கம் முதலியவற்றை வேறு படுத்திக் காட்டும் வகையில் பத்தியமைப்பு அமைவது சிறப்பு.

(4) சொல்லுக்குச் சொல் இடைவெளி விட்டும், கடின சந்திகள் பிரிக்கப்பட்டும் அமைக்கப்பட வேண்டும்.

(5) ஏற்ற நிறுத்தற் குறியீடுகளும் அமைக்கப்பட வேண்டும்.

(6) அடிக்குறிப்பு எண்ணும் அதற்குரிய அடிக்குறிப்பும் சரியாகப் பொருந்தியுள்ளதா என்றும் சரிபார்க்க வேண்டும்.[12]

(7) நல்ல பதிப்பிற்குச் சொற்பிரிப்பு முறையானது தேவை யான ஒன்றாகும். அயல் நாடுகளில் சொற்பிரிப்பு முறையை விளக்குவதற்கென்றே தனி நூல்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில அகராதிகளில் சொற்பிரிப்பு முறை பின்பற்றப்படுவதையும் காணலாம். தமிழிலும் பதிப்பகத்தார்க்கு உதவும் வகையில் சொற் பிரிப்பு பற்றி அறிவுறுத்தும் நூல்கள் வெளிவர வேண்டும்.

VI. நூலமைப்பு:

இவ்வாறு பல்வேறு வகையில் சீர் செய்யப்பட்ட கட்டுரை அல்லது நூலானது அதன் முழுவடிவத்தில் சிலஒருமைப்பாடுகளையும் கொண்டு விளங்க வேண்டும். அதாவது முன்னுரை, பதிப்புரை,

---

11. பரந்தாமனர் அ. கி, நல்ல தமிழ் எழுத வேண்டுமா ?, பக்கம் *364 – 378.*

12. பொற்கோ, டாக்டர் & மெய்யப்பன், புலமை நடை பக்கம் 5.

தலைப்பு, உள்தலைப்பு, அடிக்குறிப்பு, பிற்சேர்க்கை, உசாத்துணைக் குறிப்பு முதலியவற்றைப் பெற்றதாக அப் பதிப்பு விளங்கும் போதே அதன் நூலமைப்பு முழுமை பெறும்.

பதிப்பு நூல்களில் முன்னுரை அல்லது பதிப்புரைப் பகுதி விரிவானதாக அமைய வேண்டும். இதன்கண் நூலின் அமைப்பு, பெயர்க் காரணம், இலக்கணக் குறிப்பு, ஆய்வு முறை, நூலின் சிறப்புக் கூறுகள், நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு முதலியவற்றைச் சுட்ட வேண்டும். இவ் வகையில் அனைவர்க்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதையராவார். பதிப்பு முயற்சியில் சி. வை. தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியோரின் தொண்டும், பவானந்தர் கழகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் தொண்டும் குறிப்பிடத் தக்கன.

பதிப்பு நூல்களின்கண் தலைப்புகளையும் உள்தலைப்புகளையும் வேறுபடுத்திக் காட்டும் வகையில் அச்சமைப்பு இருத்தல் வேண்டும். பாட வேறுபாடுகள் இருப்பின் அவற்றை அடிக் குறிப்பில் காட்ட வேண்டும். மேலும் சிறந்த பாடமாகத் தாம் தேர்ந்ததன் காரணத்தையும் சுட்ட வேண்டும்.

அடிக்குறிப்பைவிட நீளமானதைப் பிற்சேர்க்கையில் தரலாம். எல்லார்க்கும் கிட்டாத மூலச் சான்றுகளையும் பிற்சேர்க்கையில் தரலாம். நீண்ட அட்டவணைகள், நீண்ட மேற்கோள்கள், பெயரகராதி, சொல்லகராதி, பாடல் முதற்குறிப்பகராதி, மேற்கோள் விளக்க அகராதி முதலானவற்றைப் பிற்சேர்க்கையில் தரலாம்.

நூலின் இறுதியின்கண் துணைநூற் பட்டியலைத் தவறாமல் தருவதும் சிறந்த பதிப்பின் இயல்பாகும்.

முடிவுரை :

ஆகவே இக் கட்டுரை தமிழ் நூல்களின் தொடக்க கால நிலை, அச்சுப் பொறியின் அறிமுகம், அதன் பயன், அயல் நாட்டார் தமிழ்ப் பதிப்புக் கலைக்குச் செய்த தொண்டு, பதிப்பின்போது நாம் மேற்கொள்ள வேண்டிய சில நெறி முறைகள் முதலானவற்றைச் சுட்டி நிற்கக் காணலாம்.

துணைநூற் பட்டியல்

1. அருணாசலக் கவுண்டர் கு, 'பழந்தமிழ்ப் பதிப்புகள்', தமிழ் வட்டம், மலர் வெளியீட்டுக் குழுவினர், கோயமுத்தூர், 1967.

2. உருத்திரங் கண்ணனார் கடியலூர், பட்டினப்பாலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1972.

3. சம்பந்தன் மா. சு, அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம், சென்னை, 1976.

4. சண்முகம் பிள்ளை மு, 'தொல்காப்பியப் பதிப்புகள்', தமிழாய்வு தொகுதி 8, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை, 1978.

5. தொல்காப்பியர், தொல் - எழுத்து, நச்சினார்க்கினியம், மழவை மகாலிங்கய்யர் பதிப்பு, திருவண்ணாமலை, 1847.

6. பரந்தாமனார் அ. கி, நல்ல தமிழ் எழுத வேண்டுமா?, பாரி நிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1978.

7. பொற்கோ டாக்டர்&அ. மெய்யப்பன், புலமை நடை, புலமை, சென்னை, 1975.

கற்பதில் மூன்றுவகை

தமிழ்க் கவிதைகளை—தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகையில் :

ஒன்று : நூலிலுள்ள அருமை பெருமை, நூல் நயம், இலக்கணச் சுவை கண்டு இன்புறுவது.

இரண்டு : அந்த இலக்கியத்தைப் பிற நாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு, எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிற நாட்டாரும் அதை உணரச் செய்வது.

மூன்று : அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று அறிந்து அதைச் சமுதாயத்திற்குத் தருவது.

—பேரறிஞர் அண்ணா

சாங்கியமும் சைவமும்

[வித்துவான், நெல்லை. க. சுப்பிரமணியன் எம்.ஏ., பி.டி.,

தூயயோவான் கல்லூரி, பாளையங்கோட்டை]

முகவுரை :

சாங்கியர் கூறும் ஐயைந்து தத்துவங்களையும் தழுவியதுடன், அவற்றோடு மேலும் பதினொரு தத்துவங்களை மிகுத்து ஆறாறு தத்துவங்களைக் கொண்டனர் சித்தாந்த சைவர்.[1] சாங்கியர்க்கும் சைவர்க்கும் சற்காரியவாதமே உயிர்நாடியான கொள்கை. ஆன்மாக்கள் பல என்பதும், அவற்றிற்குப் பிறவிகள் மாறிமாறி வரும் என்பதும் இருதிறத்தார்க்கும் உடன்பாடே. "இதனுட் கூறும் சற்காரிய வாதம் சைவ முதலிய சற்காரியவாத நூல்கட் கெல்லாம் உபகாரமாம்" என்றார் சிவஞான முனிவரர்.[2] ஆயினும், பற்பல இடங்களில் அன்னார் மாறுபடுவர்.

சாங்கியமும் சைவமும் வேறுபடுமாறு :

(1) புருடனுக்கு மலினம் என்பதில்லை. அறிவு மாத்திரையாய் நிற்பது ஆன்மா என்பர் சாங்கியர். வேறு காரணமின்றிச் செம்பிற் களிம்பு போல ஆன்மாவோடு உடன் நிற்பது ஆணவம் என்பர் சைவர். (2) ஆன்மாவுக்குக் கிரியா சத்தி இல்லை எனவும், ஆன்ம சந்நிதியில் உடம்பிற் கிரியை நிகழும் எனவும் கூறுவர் சாங்கியர். ஆன்மாவுக்குக் கலை வித்தை அராகங்களால் தொழில் அறிவு இச்சைகள் நிகழும் எனக் கூறுவர் சைவர். (3) முக்குணங்களும் மிக்கும் குறைந்தும் நில்லாது தம்முட் சமமாய் நின்ற அவத்தையே மூலப்பகுதி; அதுவே காரியங்கள் எல்லாவற்றிற்கும் முதற் காரணமாய் நித்தமாய் நிற்பதன்றி, அஃது ஒன்றன் காரியமாதல் இல்லை என்பர் சாங்கியர். முக்குணங்களும் விளங்குதலின்றித் தம்முட் சமமாய் நின்ற அவத்தையே மூலப் பகுதி; அவை விளங்கித் தம்முட் சமமாய் நின்ற அவத்தையே குணதத்துவம்; அவை சமமாகாது தம்முள் மிக்குங் குறைந்தும் பரிணமித்து நின்ற அவத்தையே புத்தி தத்துவம் என்பர் சைவர்.

---

1. J. M. Nallaswami pillai, Sivagnana siddhiyar, Madras (1913) P. 107.

2. *சிவஞான முனிவர், சிவஞான போதமும் பாடியமும், சை. சி கழகம், சென்னை-1 (1952) ப. 59.*

(4) ஆன்மா தாமரையிலையில் நீர்போல் பற்றற்று நிற்ப ஆன்ம சந்நிதியில் புத்தி தத்துவமே ஐம்பொறிகள் வழியாகப் பொருட்களை அறியும் என்றுரைப்பர் சாங்கியர். ஆன்ம போதத்தைத் தீபம்போல நின்று விளக்குதல் மாத்திரையேயன்றிப் புத்தியானது தானே அறியுமாறில்லை என்றுரைப்பர் சைவர். (5) இருவினைகளை ஈட்டலும் துய்த்தலும் மூலப் பகுதியில் தோன்றும் புத்திக்கேயன்றிப் புருடற்கில்லை என்பர் சாங்கியர். ஆன்மாவுக்கு இருவினைகள் முதல்வன் ஆணையால் வரும் என்பர் சைவர். (6) பகுதியின் சமநிலை கலையுங்கால் படைப்புத் தொடங் குதல் இயற்கை. அதற்கு நிமித்த காரணன் ஒருவன் வேண்டா என்று சாற்றுவர் சாங்கியர். உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை இல்லை என்பதனால், இவ் வுலகைப் படைத்தற்கு ஒரு கருத்தா உண்டு என்று சாற்றுவர் சைவர்.

(7) பகுதி வேறு, தான் வேறு என்று மெய்யாக உணர்தலே விடுதலை என மொழிவர் சாங்கியர். அவனருளாலே அவன்தாள் வணங்கி ஆன்மா வீடு எய்தும் என மொழிவர் சைவர். (8) பிரபஞ்சத்திற்கு முதற் காரணம் சாங்கியர் கருத்தின் வண்ணம் மூலப் பகுதியாம்; சைவர் கருத்தின் வண்ணம் மாயையாம். (9) அந்தக்கரணம் மூன்று என்று பகர்வர் சாங்கியர். அவை நான்கு என்று நவில்வர் சைவர். (10) தத்துவங்கள் இருபத்தைந்து என்பது சாங்கியம். அவை முப்பத்தாறு என்பது சைவம்.

விடுபேறு பற்றிச் சாங்கியமும் சைவமும் :

சாங்கியம் நிரீச்சுரவாதம் ஆதலினாலும், சைவத்தோடு சாங்கியத்துக்கிடையே மேற்கூறிய வேறுபாடுகள் பற்பல உள்ளன. ஆதலினாலும், சைவசித்தாந்த சாத்திரங்களில் ஆங்காங்கே பரபக்கமாகச் சாங்கியம் எடுத்தோதி மறுக்கப்பட்டுளது. சிவப் பிரகாசத்தில் சாங்கியர் கூறும் வீடுபேறு "திரிகுணமும் அடங்கும் முத்தி" என்று எடுத்துக்காட்டி, "அது பழிசேர் முத்தி" என்று மறுத்துரைத்துத் "திரிமலமும் அகல உயிர் அருள்சேர் முத்தி திகழ் முத்தி இதுமுத்தித் திறத்ததாமே" என்று பரிகரிக்கப்பட்ட வாறறிக.[3]

நிரீச்சுர சாங்கியம் :

"மூலம் புரியட் டகம்விகிர தி
யாகி மூன்றாய்ப் பிரகிருதி

3. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், சை. சி. கழகம், சென்னை-1 (1969) ப. 169.

தூல சூக்கு மம்பரமாய்ச்
சுத்த புருடன் சந்நிதியில்
பாலன் சேட்டை புரிந்துலகம்
யோனி பலவாய்ப் பரந்தொடுங்கும்
சால வென்று நிரீச்சுர
சாங்கி யன்றான் சாற்றிடுமே."[4]

பிரகிருதி புருடன் என்ற இரண்டில், பிரகிருதி மூலம் என்றும் புரியட்டகம் என்றும், விகுதி என்றும் மூன்று பெயரையுடையது. பிரகிருதியைப் பகுதி என்று தமிழில் கூறுவது தகும். அது சித்தியாரில் மூலம் என மொழியப்படுகிறது. இருபத்து நான்கு தத்துவங்களுக்கும் மூலமான தத்துவம் ஆகலின் அவ்வாறு அது சுட்டப்படுகிறது. அது சித்தம் எனவும் வழங்கும்.[5] பிற தத்துவங்கள் பரிணமித்தற்குக் காரணமாகவும் தனக்கொரு காரணமற்றதாகவும் உளதாதலின், அது பரம் என்று பகரப்படுகிறது.

புரியட்டகமாவது மானகங்கார மனங்களும் தன்மாத்திரைகளும் கொண்டது. அதுவே சூக்குமம் எனப்படும். விகிர்தி தமிழில் விகுதி. அது தூலதேகமும் பிரபஞ்சமும் கொண்டது. அஃதாவது பஞ்ச பூதங்களும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும் மனமும் ஆகிய பதினறு தத்துவங்கள். மலினமற்ற புருடன் முன்னிலையில் பிரகிருதி பரிணமித்துப் பிரபஞ்சமாக விரியும். பிரபஞ்சத்தில் புருடன் குழவியின் செயல்போல் அறியாமையைப் பொருந்திப் பல்வகைப் பிறப்புக்களில் மிகவும் உழல்வான். தனக்கு விவேகம் வந்ததும், அவன் பிரகிருதியிலிருந்து விலகுவான் என நிரீச்சுர சாங்கியன் சாற்றுவான்.

மூலப் பிரகிருதி (பிரதானம்) அவ்வியத்தம் எனப்படும். ஏனைய தத்துவங்கள் வியத்தம், வியத்தமே சத்து அல்லது புலப்படுவது. அவ்வியத்தமே அசத்து அல்லது புலப்படாதது. புருடனும் அவ்வியத்தமே. அசத்து என்பது அப்பிரகாசமாய் நிற்றல், விளங்கித் தோன்றுமை, முனைத்திடாமை என்று மெய்கண்டார், அருணந்தி சிவம் முதலிய மேலோர்களால் உரைக்கப்படும். அவர் கருத்து அறியாராய் A. J. டேவிசு என்பார் சத்து, அசத்து என்பவற்றை மொழி பெயர்த்தது வழுவுடைத்து.[6] பொறிகளால் அறியப்படுவதே சத்தியம் என்று உலக வழக்கில் நிலவுவதும் இங்கு நினைவு கூரற்பாற்று.

---

4. *சிவஞான சித்தியார் பரபக்கம், 260.*
5. *மணிமேகலை, 27 : 206.*
6. Quote from : J. M. Nallaswami Pillai, op. cit., PP *107—8.*

கழக நூலாசிரியர் இருவருக்கு
மதுரை, காமராசர் பல்கலைக்கழக விருது

கழக நூலாசிரியர்களான, உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி வித்துவான் ஔவை. சு. துரைசாமி பிள்ளை, தமிழ் ஆராய்ச்சி அறிஞரான மயிலை. சீனிவேங்கடசாமி ஆகிய புலவர் பெருமக்கள் இருவருக்கும் கடந்த 29—3—80 அன்று மதுரை, காமராசர் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேரவைச் செம்மல் என்னும் சிறப்புப் பட்டத்தினை வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியது. இவ் விழாவிற்குத் தமிழ்நாட்டு ஆளுநர் மாண்பமை பிரபுதாசு பட்வாரி அவர்கள் தலைமை தாங்கி விருதினை வழங்கினர். பேராசிரியர் ஔவை சு. துரைசாமிபிள்ளை அவர்கள் நேரில் வந்து பட்டத்தினைப் பெற்றுக்கொண்டனர். மயிலை சீனி





வேங்கடசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் வர இயலவில்லை. அவருக்குப் பதிலாக அவர்தம் பேத்தி அழகம்மையார் வந்திருந்து பட்டத்தினைத் தம் தாத்தா அவர்கள் சார்பில் பெற்றுக்கொண்டார்.

விருதினைப் பெற்றதன் மூலம் புலவர் இருவரும் மதுரைப் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழு உறுப்பினராயினர்.

விருதுபெற்ற இவ்விரு அறிஞர்களுள் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிபிள்ளையவர்கள் நம் கழகத்துடனும், கழக ஆட்சியாளருடனும் பல்லாண்டுகளாகத் தொடர்புடையவர்களாவர்

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்கநூல்கட்கு இவர்கள் எழுதியுள்ள உரைகள் அறிஞர் பெருமக்களால் பெரிதும் பாராட்டத் தக்கவை. 1956 இல் கழகம் நடத்திய பதினெண் கீழ்க் கணக்கு மாநாட்டிற்கு இவர்கள் தலைமை தாங்கினர்.

இவர்கள் 'ஐங்குறு நூற்றுக்கு உரை எழுதியுள்ளனர். இதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. நற்றிணைக்கும் இவர் உரை கண்டுள்ளார். 'பண்டை நாளைய சேர மன்னர் வரலாறு' என்னும் இவர்தம் நூல் சேரர் பற்றிய அரிய வரலாற்று நூலாகும்.

அறிஞர் சீனிவேங்கடசாமி அவர்கள் எழுதிய சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், கிறித்தவமும் தமிழும், நரசிம்ம வர்மன், மகேந்திரவர்மன் ஆகிய அரிய ஆராய்ச்சி நூல்கள் கழக வழி வெளிவந்துள்ளன என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இவர்தம் படைப்புகளான 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' '19 ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்' போன்றவை அரிய ஆய்வு நூல்களாகும். இவை தவிரத் தமிழர் தம் வரலாறு சமயம் பற்றிய ஆய்வு நூல்களையும் அரிய கட்டுரைகளையும் இவர் படைத்துள்ளார்.

விருதினை வழங்கிய ஆளுநர் அவர்கள் அறிஞர் இருவர் களின் அறிவாற்றல்களைப் பெரிதும் புகழ்ந்துரைத்தார். பல்கலைக் கழக ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராசன் அவர்கள் வரவேற்புரையாற்றினர். செல்வி என். சகுந் தலா நன்றி நவில விழா இனிது முடிந்தது.

விருதுபெற்ற அறிஞர் பெருமக்கள் இருவர்க்கும் கழகத்தின் சார்பில் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

———

கவிஞருக்குப் பாராட்டு

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய "என்றும் இளமை" என்னும் கவிதை நூலுக்குத் தமிழ்க் கவிஞர் மன்றத்தின் சார்பில் சென்னை மைய நூலக மண்டபத்தில் 16—3—80 இல் பாராட்டு விழா நடைபெற்றது. உயர்நீதிமன்ற நடுவர் தீர்ப்பாளர் பு.ரா.கோகுல கிருட்டிணன் அவர்கள் தலைமையில் தொழிலதிபர் பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்கள் மேற்படி கவிதை நூலை வெளியிட்டுப் பாராட்டினர். திருவாளர்கள் புலமைப்பித்தன், எஸ். நல்ல பெருமாள், முனைவர் நன்னன், இசைமணி சீர்காழி கோவிந்தராசன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

மதுரை திருஞானசம்பந்தர் திருமடத்தின் தலைவர் தவத்திரு சோமசுந்தர பரமாச்சாரிய அடிகள் இறையடிப்பேறு

மதுரையாதீனம் 291வது மகா சந்நிதானம் தவத்திரு சோமசுந்தர ஞான சம்பந்த தேசிக பரமாசாரிய அடிகள் மார்ச்சுத் திங்கள் 14ஆம் நாள் தமது 78வது அகவையில் இறையடி சேர்ந்தார்கள்.



1953ஆம் ஆண்டு இளவரசுப் பட்டம் பெற்ற இவர்கள் 1957ஆம் ஆண்டு சனவரி மாதம் பேரரசு ஆனார். சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம் குலசேகரன்பட்டினம். தந்தையார் வயிரவநாத பிள்ளை. தாயார் பெயர் பாப்பம்மாள்.

வரலாற்றுச் சிறப்புகள் :

தவத்திரு அடிகளார் இந்தியாவிலும் இலங்கையிலும் படித்துப் பட்டம் பெற்றார். 1926இல் இலங்கையில் 'சுந்தரம் கம்பெனி' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் பெரும் பொருள் திரட்டினார். இவர் இல்லறவாழ்க்கையில் ஈடுபட்டிருந்தவராயினும், மகப்பேறு இல்லை. இவர் பெருஞ்செல்வராக விளங்கியபோது அறப்பணிகளில் பெரிதும் நாட்டங் கொண்டிருந்தார். குலசேகரன் பட்டினத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளியினை நிறுவியுள்ளார். 1952இல் இலங்கைத் திருக்கேதீசுவரர் திருக்கோயில் குடமுழுக்கினை நடத்திவைத்தார். 1946இல் தில்லியில் நடைபெற்ற 'இந்திய தத்துவப் பேரவை' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளார். 1953இல் அடிகளார் மனம் துறவின்பாற்படத் தமது பெருஞ்செல்வத்தை மதுரைத் திருமடத்திற்கு ஒப்படைத்து இளவரசுப் பட்டமேற்றார். 1957இல் அம்மடத்தின் 291ஆவது தலைவராகப் பட்டமேற்றார்.

இவர்கள் இறந்தவர்களோடு பேசும் முறைபற்றி ஆராய்ச்சிகள் செய்து விளக்கமாக ஆங்கிலத்திலும், தமிழிலும் முப்பது நூல்கள் எழுதியுள்ளார்கள். சைவசித்தாந்தப் பேருண்மைகளை மக்களுக்கு விளக்கி நூற்றுக் கணக்கானவர்களுக்குச் சிவதீக்கை செய்து வைத்துள்ளார்கள். 1953ஆம் ஆண்டிலிருந்து ஆயிரக்கணக்கான கிறித்துவர்களை இந்து மதத்திற்கு மதமாற்றம் செய்து இருக்-

கின்றார்கள். மறைமலையடிகளார் எழுதிய "மரணத்தின்பின் மனிதர் நிலை' என்னும் நூற்கருத்துக்களைச் செயற்படுத்து முறையில் இவர்கள் தமது திருமடத்தில் பல கருவிகளைப் பயன்படுத்தி இறந்தவர்களுடன் பேசி வந்தார். இவர் எழுதிய நூல்களுள் Hindu yogis Astounding discoveries என்னும் நூல் குறிப்பிடத் தக்கது.

அடிகளார்க்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர்க்கும் நீண்டகாலத் தொடர்பு உண்டு. 1951இல் இலங்கையில் நடைபெற்ற தமிழர் மாநாட்டிற்குச் சென்ற கழக ஆட்சியாளர் அடிகளாருடன் நெருங்கிப் பழகினார். அடுத்த ஆண்டில் அடிகளார் இளவரசுப்பட்டம் ஏற்ற நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். அடிகளார் கழகம் நடத்திய சிறப்பு நிகழ்ச்சிகளில் பெரிதும் ஈடுபாடுகொண்டு அவ்வப்போது தம்முடைய வாழ்த்துக்களை வழங்கிவந்தார். மறைமலையடிகள் கலைமன்றச் சிறப்பு விழாவில் கலந்துகொண்டதோடு சென்னையில் மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு ஒருமுறை வந்து பார்வையிட்டுப் பாராட்டியுள்ளார்.

மறைமலையடிகளாரோடு ஆவியுலகத் தொடர்புகொள்ள இடை நடுவராக (medium) இருக்கும் திரு. குற்றாலலிங்கம்பிள்ளை அவர்களைத் தம் ஆதீனத்துக்கு வரவழைத்து, அவர் உதவியால் ஆவியுலகத்து மறைமலையடிகளாருடன் பேசி மகிழ்ந்தார்.

இங்ஙனம் அறவாழ்வும் தவவாழ்வும் நடத்திய அடிகளாரின் இன்னுயிர் இறையடியில் இன்புறுவதாக.

ஈரோடு திருக்குறள் பேரவை 2ஆம் ஆண்டு நிறைவுவிழா

ஈரோடு திருக்குறள் பேரவையின் 2ஆம் ஆண்டு நிறைவுவிழா 3—4—80 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. பேரவைத் தலைவர் திரு. சி. பெரியண்ணன் விழாவிற்குத் தலைமை தாங்கினார். காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் திரு.ச. இரத்தினம் அவர்கள் விழாத் தொடக்கவுரை ஆற்றினர். திரு. சாயிபாபா இராதாகிருட்டிணன் அவர்கள் விழா முன்னவராக இருந்து விழாவினை நடத்தினர். திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள் நடுவராக இருக்க, திரு. தி. முருகுசுந்தரம் தொடக்கவுரையாற்றப் பட்டிமன்றமொன்றும் நடைபெற்றது. இதில் அறிஞர் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.



மதுரை யாதீன
292 ஆவது ‘குருமகா சன்னிதான’மாகப் பட்டமேற்றுள்ள
தவத்திரு அருணகிரிநாத அடிகள்

மதுரையாதீனத்தின் புதியதலைவர்
தவத்திரு அருணகிரிநாத அடிகள்

மதுரை ஆதீனத்தின் 292வது குருமகா சந்நிதானமாகப் புதிதாகப் பீடத்தில் அமர்ந்து அருளாட்சி புரியும் தவத்திரு அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய அடிகள் திருநெல்வேலி மாவட்டம் உடன்குடியைச் சேர்ந்தவர். தகப்பனார் பெயர் ஆர். எம். குமாரசுவாமிபிள்ளை. தாயார் சுந்தரத்தம்மாள். இவர் 1975ஆம் ஆண்டு மே மாதம் 27ந்தேதி மதுரையாதீனத்தின் இளவரசாகப்பட்டம் சூட்டப்பெற்றார்.

கல்லூரியில் சேராமல் தனியாகப் படித்து எம். ஏ. பட்டம் பெற்றவர். தருமையாதீனத்திலுள்ள கீழ்த்திசைக் கலைக் கல்லூரியில் தமிழ் பயின்று வித்துவான் பட்டம் பெற்றதுமன்றி ஆங்கில மொழியிலும் நன்கு தேர்ச்சிபெற்றவர். இளவரசாகப் பட்டம் ஏற்பதற்கு முன்னர் தருமையாதீனத்தில் இரண்டரை ஆண்டுகள் தம்பிரான் ஆக இருந்தும், பின்னர் சென்னையில் 'தமிழ் முரசு' நாளிதழில் துணை ஆசிரியராகவும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் ஆணை பெற்ற செய்தியாளராகவும், சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் ஆணை பெற்ற செய்தியாளராகவும், காவல்துறை உயர்கண்காணிப்பாளர் (I. G) ஆணைபெற்ற செய்தியாளராகவும் இதழ் அறமுறை வழுவாது திறம்படப் பணியாற்றியதன் மூலம் நல்ல பட்டறிவினையும், அறிவுத் தெளிவையும் செல்வாக்கையும் பெற்றவர்.

இதழ் உலகில் அருணகிரிநாதன் என்றால் அறியாதவர் யாரும் இல்லை. அதுமட்டு மல்லாமல் ஒரு தலைசிறந்த இதழ் எழுத்தாளர் ஒருவர் இந்தியாவிலே மிகப் பழமையான மடாலயமான மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் 292வது குருமகா சந்நிதானமாக அருளாட்சிப் பீடம் ஏற்று சைவமும், தமிழும் தழைத்தினிதோங்க, காலத்தையொட்டி தமது அணுகு முறையை எளிமையாக்கித் தொண்டாற்றி வருவது பத்திரிகையாளர் உலகுக்கு மட்டுமன்றிச் சைவப் பெருமக்கள் தமிழ்ப்பெருமக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அவர்கள் அத்தனை பேருக்கும் பெருமைதரக் கூடியதாக இவருடைய ஆட்சி சிறப்புற்று விளங்குவது பெருமகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

———

செய்திகளும் குறிப்புக்களும்

தமிழகச் செய்தித்துறை இயக்குநர் திரு. எம். எஸ். கோபால்

அனைத்திந்திய வானொலியில் துணைத்தலைமை இயக்குநராக இருந்து ஓய்வுபெற்ற திரு. எம். எஸ். கோபால் அவர்கள் தற்போது தமிழக அரசின் செய்தித்துறை இயக்குநராகப் பதவி ஏற்றுள்ளார்.

திரு. கோபால் அவர்கள் நெல்லைமாவட்டத்தில் வேளாண்மைக் குடும்பத்தில் தோன்றியவர். இவர்தம் பதவிக்காலத்தில் வானொலியில் வேளாண்மை நிகழ்ச்சிகள், பல சிறந்த நாடகங்கள், கவிதைகள், சிறுவர் நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் இடம்பெறச் செய்தார்.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். தமிழ்ப்பற்றுளர். தமிழில் நாடகங்கள், கதைகள், கவிதைகள் பல இயற்றியுள்ளார். பழகுதற்கு இனியர், நல்ல பண்பாளர். வானொலித்துறையில் 30 ஆண்டுக்காலம் பணியாற்றியவர். தற்போது இவர் பொறுப்பேற்றுள்ள செய்தித் துறையில் நல்ல பல முன்னேற்றங்களைக் காணலாம்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள்

சென்னை நக்கீரர் கழகத்தின் சார்பில், பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள், சென்னை மாநிலக் கல்லூரியில் 17—3—80இல் துவங்கி 24—3—80 முடிய நடைபெற்றன. நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் அ. கலாநிதி, எம். டி., அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்து நக்கீரர் கழகச் சிறப்புப் பேராசிரியர்கட்குப் பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கினர். கழகத் தலைவர் திரு. கா. ஏ. அருணாசலம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். சிலப்பதிகாரம், சங்க காலம், இலக்கியம், மொழியியல், கம்பராமாயணம், தொல்காப்பியம் என்னும் பொருள்கள் பற்றி முனைவர்களும், பேராசிரியர்களும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர்.

தெய்வப் பணி மகளிர் மன்ற இரண்டாம் ஆண்டுவிழா

தெய்வப் பணி மகளிர் மன்றம், பொன்னுசாமி வானொலி சிறுவர் சங்கம் ஆகியவற்றின் இரண்டாம் ஆண்டுவிழா 16—3—80 அன்று, வண்ணையம்பதி நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. புலவர் பொ. தெய்வநாயகி சோதி வரவேற்புரை நிகழ்த்தினர். திருமதி வசுமதி இராமசாமி தலைமை தாங்கினர். தமிழ் அறிஞர்களும் பேராசிரியர் பலரும் வாழ்த்துரை வழங்கினர். இவ் விழாவினையொட்டிக் கலை நிகழ்ச்சியும், மலர் வெளியிடலும் நடைபெற்றன.

அங்கதப் பாட்டு ஆராய்ச்சி

தனி மனிதரையும் குமுகாயத்தையும் இடித்துரைக்கும் இலக்கியம் அங்கதப் பாட்டெனப்படும். இத் துறை தமிழ் இலக்கியத்தில் பண்டு இடம் பெற்றிருந்து, இன்று அருகிப் போய்விட்டது. அத்தகைய இலக்கியத் துறைக்குப் புத்துயிர் ஊட்டும் வண்ணம் தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் இளந்திரையன் அவர்கள் "தமிழில் அங்கதக் கவிதை" என்னும் தலைப்பில் ஓர் ஆராய்ச்சியினை நடத்தத் திட்டமிட்டுள்ளார். அவர்தம் ஆராய்ச்சிக்கு உதவும் வகையில் அங்கதப் பாட்டு பற்றிய செய்திகளை அறிந்திருப்போர், "முனைவர் சாலை இளந்திரையன், 94/7 W.E.A. கரோல்பாக், புதுதில்லி" என்னும் முகவரிக்குத் தெரிவிக்குமாறு ஓர் அறிக்கை மூலம் அவர் கேட்டுக் கொள்கிறார்.

மாணவர்கட்குக் கல்லூரிக் கல்வி இயக்குநர் வேண்டுகோள்

அண்மையில் கல்லூரிக் கல்வி இயக்குநராகப் பதவி ஏற்ற பேராசிரியர் ஜே. இராமச்சந்திரன் அவர்கள் ஆசிரியர்கட்கும் மாணவர்கட்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டும் என்றும், மாணவர்களும் ஆசிரியர்களும் நூலகங்களைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், நூலகங்கள் பெருகுவதோடு அவை கவர்ச்சிமிக்கனவாகவும், படிப்போருக்கு நல்ல வசதிகளைச் செய்து தருவனவாகவும் அமைதல் வேண்டுமென்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் இராமச்சந்திரன் 1966 முதல் 1979 வரை மாநிலக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியுள்ளார். இவர் சிகாகோ பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். கல்வித் துறையில் நிரம்ப பட்டறிவு வாய்க்கப் பெற்றவர். பல நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து பல பல்கலைக் கழகங்கட்கும் சென்று பார்வையிட்டு வந்தவர். இவர்தம் பதவிக் காலத்தில் எல்லாவகையிலும் கல்லூரிக் கல்வி சிறப்படையும் என நம்புகிறோம்.

சிற்றிலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் தொடக்கவிழா

ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தின் சார்பில் 25—3—80 மாலை 6-15 மணியளவில் சிற்றிலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் தொடக்க விழா நடைபெற்றது. உயர்திரு புலவர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினர். திரு. சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள், செந்தமிழிலுள்ள சிற்றிலக்கிய வரிசையினைத் தொகுத்து அறிமுகப் படுத்துமுகத்தான் தொடக்கவிழாச் சொற்பொழிவாற்றினர். தமிழன்பர்கள் பலர் விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்தனர். செயலாளர் திரு. கெ. பக்தவச்சலம் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனர் மறைவு

காலஞ் சென்ற தமிழ்ப் பேரறிஞரும், கல்வெட்டாராய்ச்சியாளருமான முனைவர் மா. இராசமாணிக்கனர் அவர்களின் துணைவியார் திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனர், தமது 64ஆம் அகவையில் 11—3—80இல் காலமானர் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம். அவர்தம் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ௫௪—௩௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு.	வ. சுப்பையாபிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	10—00
,,	ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள், கழக மேலாளர்	5—00
,,	A. T. A. ஈசுவர் அவர்கள், சென்னை	5—00
,,	K. R. G. சம்பந்தம் அவர்கள் (தம் செல்வி இராசலெட்சுமி பூப்பு நீராட்டு விழா நன்கொடை)	11—00

———

மதிப்புரை

பொருள்கோள்

[ஆசிரியர் : மருதூர் ச. அரங்கராசன், வெளியீடு : பாலமுருகன் பதிப்பகம். மருதூர் (அஞ்சல்) உடையார்பாளையம் வட்டம், திருச்சி மாவட்டம்-621710. பக். 16+230 விலை ரூ. 16-00.]

பொருள்கோள் பற்றிய அரிய ஆராய்ச்சி நூல் இது. பொருள் கோள் வரையறை, வகைகள், மாறுபாடுகள், வளர்ச்சி, இலக்கணத்தில் அதன் இடம் ஆகியனபற்றிச் செவ்விய முறையில் வரம்புகட்டிக் கொண்டு நுனித்து ஆராய்ந்து வரையப்பெற்ற நூல் இது.

"பொருள்கோள் வகை, பகுப்பு ஆகியவற்றில் ஆசிரியர் பலரும் வேறுபடுவதுண்மையால்ஐயமும் சிக்கலும்அகற்றுதற்கு" இவ்வாய்வினை மேற்கொண்டதாகச் சுட்டும் (5) ஆசிரியர் அப்பணியில் வெற்றிகண்டுள்ளார் என்பது தெளிவு.

வேண்டும் இடங்களில் எல்லாம் அட்டவணை, வரிமரம், வரை கட்டப்படம், ஆகியவற்றைப் படைத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். பயனுள்ள பின்னிணைப்புகளும் சேர்த்துள்ளார்.

நிரனிறையை நிரலேநிறைத்தல் என்றும், நிரலேநிறைகின்றன என்றும் (40, 41) இவர் குறிப்பிடுகிறார். அது நிரலே நிறுத்துதல் ஆகும். நிறை என்பதன் பொருள் நிறுத்துதலே அன்றி நிறைதல் அன்று.

"அடல்வேல் அமர்நோக்கி" என்னும் பாடல் பொது நிரனிறை என்று சேனாவரையரும் நச்சரும் கூறுவதை மறுக்கும் பகுதி ஆய்வுக்குரியது. (44)

முடிவனவும், முடிப்பனவுமாகிய வினைச்சொல் வேறுவேறு நிற்பது வினை நிரனிறை. முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச் சொல் வேறுவேறு நிற்பது பெயர் நிரனிறை. முடிவனவும் முடிப்பனவுமாகிய சொற்கள் பெயரும் வினையுமாக மாறி வேறு வேறு நிற்பது பொது நிரனிறை என்னும் முறையில் ஆராயின் சிக்கல் அறும்.

அடிமறி பற்றித் தடைவிடையுடன் ஆராயும் ஆய்வு மிகச் சிறக்கிறது (50 - 55). "அச்சுப் பிழைகள், அறவே இல்லாமல் நூலை வெளிக் கொணர வேண்டுமெனப் பெரிதும் முயன்றும் தவிர்க்க இயலா வகையில் சில பிழைகள் இடம் பெற்று விட்டன" என்று (XII) வருந்தும் ஆசிரியர் நல்நெஞ்சம், நம்நெஞ்சில் இடம் பெறுகிறது. அச்சும், அமைப்பும், உறையும் அழகியன. இலக்கிய ஆய்வாளர் அனைவரிடமும் இருக்க வேண்டிய அரிய நூல் இது. ஆசிரியர் முயற்சி வெல்க.

—இரா. இளங்குமரன்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

சைவசித்தாந்தத் திறவு—க. வச்சிரவேலு முதலியார்	8	00
சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும் —முனைவர் D. P. சித்தலிங்கம்	8	00
இராமப்பய்யன் அம்மானை - ஓர் ஆராய்ச்சி —க. சி. கமலையா	6	00
உண்மைக் கதைகள்—சிவசங்கரி	4	00
வைர மூக்குத்தி—லட்சுமி	6	50
ஒரு சிங்கம் முயலாகிறது—சிவசங்கரி	4	00
கைரேகைக் களஞ்சியம் —சாரபல சோதிடர், ஆர். வி. பி.	10	00
சங்கரர் கதைகள்—எஸ். சங்கரன்	2	00
வல்லத்து இளவரசி—விக்ரமன்	2	00
பில்லா-ரங்கா—செம்பியன் (கல்கி இராசேந்திரன்)	5	00
என்றும் இளமை—புத்தனேரி சுப்பிரமணியம்	12	00
இதழியல் இரா. கோதண்டபாணி, எம்.ஏ.	13	50
மொழியியலும் பிறவியலும்—முனைவர் முத்து சண்முகம்	4	00
துணுக்குத் திரட்டு—முனைவர் இரா. மோகன்	5	00
பாரதியும் பாரதிதாசனும்-ஒப்பில் திறனாய்வு —முனைவர், சி. கனகசபாபதி	30	00
தமிழ்நாட்டுச் சிறுவர் நாடோடிக் கதைகள் —வீர. வேலுசாமி	5	00
மு. வ. கடித இலக்கியம், கண்ணோட்டம் —முத்துசண்முகம்	5	55
புனைகதைத் திறன்—முனைவர் இரா. மோகன்	10	00
மாயமான் வேட்டை—இந்திரா பார்த்தசாரதி	11	00
அன்றுவந்த நிலா—சி. ஆர். ராஜம்மா	7	00
போராடும் உள்ளங்கள்—வில்லவன்	11	00
உறங்காத கண்கள்—ரமணி சந்திரன்	9	00
பாரதிதாசன் பாட்டுத் திறம்—மு. அப்துல்கரீம்	9	00
மண்ணில் உதிர்ந்த மலர்—மாரி அறவாழி	15	00
கடற்கரைக் காவியம்—மதுரை இளங்கோவன்	12	00
பழங்கால இந்திய அரசியலும் பண்பாடும் - கி. பி. 1206 வரை	15	00
பொற்கிழி—கோவி மணிசேகரன்	6	00
சுதந்திரப் போர்க்களம்—ம. பொ. சிவஞானம்	10	00
Buddha The Enlightened—K. V. Acharya	2	70
A Short History of The Ancient Tamils and Their Literature—S. Ratnasamy, B.A.	10	00

பதிவு எண் : M. 4899

கழகப் புதிய வெளியீடுகள்

நெல்லைக் குடைவரைக் கோயில்கள்

ஆசிரியர் : தி. இராசமாணிக்கம், பி. ஏ., பி.காம்., விசாரத்

நெல்லை முதலான பல ஊர்களில் உள்ள மலைகளைக் குடைந்து உருவாக்கப்பெற்ற கோயில்களைப் பற்றிய காட்சிகள் இந்நூலின்கண் விளக்கப்பட்டுள்ளன. அவை சுற்றுலாச் செல்வோர் கண்டுகளிக்கக் கூடிய காட்சிகளாக மட்டுமின்றி, ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படும் வகையிலும் உள்ளன. முன்னாள் அறநிலைய ஆணையர் உயர்திரு அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் அணிந்துரையுடனும் படங்களுடனும் கூடிய அழகிய நூல். விலை ரூ. 5 - 00

திருப்புகழ்ப் பெருந்திரட்டு

குறிப்புரை : கழகப் புலவர் குழு.

திருப்புகழ்ப் பாடல்கள் அனைத்தையும் படித்தின்புற இயலாதோர்க்குப் பயன்படும் வகையில் 693 அரிய பாடல்களை மட்டும் தொகுத்துத் தக்க குறிப்புரையுடன் வெளியிடப் பெற்றுள்ளதே இத் திருப்புகழ்ப் பெருந்திரட்டு. இதில் அருண கிரிநாத அடிகள் வரலாறும் தரப்பட்டுள்ளது. நூலகங்களிலும் முருக அன்பர்கள் இல்லங்களிலும் இருக்கவேண்டிய அரிய தொகுப்பு. அழகிய பதிப்பு. விலை ரூ. 20 - 00

கழக இலக்கியச் செம்மல்

புலவர் இரா. இளங்குமரன் எழுதிய

அரிய நூல்கள் மூன்று

மதுரைக் கோயில் வரலாறு

மதுரை மீனாட்சி, சொக்கநாதர் கோயில்கள், பொற்றாமரைக் குளம் ஆகியவற்றின் அமைப்பு, மாண்பு, திருவிளையாடற் புராணச் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியன பற்றி, உரையாடல் முறையில் இனிய தமிழில் அமைந்த பயனுள்ள வரலாற்றுநூல். அறநிலைய ஆணையர் உயர்திரு மா. சுப்பிரமணியம் அவர்கள் அணிந்துரையுடனும் படங்களுடனும் கூடியது. விலை ரூ. 6 - 00

வளர்புகழ் வள்ளுவம்

திருக்குறள் உலகப் புகழ் பெற்றது. அதன் அருமை பெருமைகள் அளப்பில. எனினும் அவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையில் தொகுக்கப்பட்ட கருத்துரைகளின் தொகுப்பே இந்நூல். திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிக்கு இந்நூல் துணைபுரியும். விலை : ரூ. 2 - 00

தமிழ் இலக்கியத்தில் இயற்கை ஓவியம்

தமிழிலக்கியத்தில் வரும் விலங்கினங்களின் வியத்தகு பண்புகளை விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இதில் விளக்கப்படும் காட்சிகள் நேரில் காண்பன போன்று சுவைபட அமைந்துள்ளன. உயிர் நூல் புலவர்கட்கும், ஆராய்ச்சியாளர்க்கும் இந்நூல் துணைபுரியும். விலை ரூ 4 - 00